Dom Bosco

V 6 No 28 20 July 1933

OTJ 211, N28 K N
N 33.6.28.
189152

KALANILAYAM

தனிப்பிரதி விலை. அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6] 1933 வருடம் ஜூலை மீ 20உ [No. 28

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 533
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 535
3. காற்றுமழை (அங்கம் 2. களம் 2.)
Shakespeare's Tempest 537
4. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 539
5. கலித்தொகை (பாலைக்கலி, 17)
T. A. கனகசபாபதி முதலியார் 542
6. அப்பர் (64-கலை, வியாகரணம்-பெயரும், இடையும்.)
E. N. தணிகாசல முதலியார், B.A., B.L., 542
7. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 544
8. அமீல்
T. R. இராஜகோபால் 545
9. பொதிகை நிகண்டு (பா-காரம்)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 547
10. வர்த்தமானம் 548

கலாநிலயம்

189152

வால் வேறு வாய் வேறு.

"வாலைப்பிடித் திழுக்காதே, கடிக்கும்" என்று தடுத்த அன்னையை நோக்கி, "ஏனம்மா, பூனை வாலினாலா கடிக்கும்?" என்று ஒரு சிறுபிள்ளை கேட்டான். இக்கேள்வியுள் அடங்கிய இரகசியம் ஆராயத் தக்கது. பூனைகள் வாலால் கடிப்பதில்லை என்றவரையில் இந்தப்பிள்ளையாண்டனுக்குத் தெரிந்திருந்தது. எனினும், இழுத்தது வாலையேயாயினும் கடிப்பதற்கோ பூனையின் வாய் வந்துசேரும் என்பதை எண்ணி, வாலை இழுப்பதற்கும் வாய் கடிப்பதற்கும் உள்ள தொடர்பைச் சேர்ப்பதற்கு இன்னும் இச்சிறுமனம் பயிலவில்லை.

இவ்வுலகத்தில் வால் இருப்பது பூனைக்குமட்டுமேயன்று; இழுப்பவர்களும் பிள்ளைகள்மட்டுமேயல்லர். மனிதர் விவகரிக்கின்ற விடயங்கள் அனைத்திற்கும் இழுப்பதற்கோர் வாலும் கடிப்பதற்கு ஓர் வாயும் இருக்கின்றன. ஒன்றன் வாலைப் பிடித்திழுக்க நினைக்குந்தோறும் வாயின் இருக்கையையும் மாந்தர் மறவாராயின், இத்துணைக் கடிபடாமல் தப்புவார். நாம் எவையெவை எவ்வெவ்வளவு அறிவோம் என்பதை மாத்திரம் நிச்சயம் செய்துகொள்வது, உலகத்தில் விவகரித்து உய்வதற்குப்போதாது. இதனோடு நிற்போமாயின், நாம் பூனையின் வால் கடிப்பதில்லை என்றவளவு அறிந்திருந்த பிள்ளையின் கதியைக் கைப்புண்ணிற் கண்டுகொள்ள நேரிடும். வாலைப் பிடிக்க நினைக்கும்போது பூனையின் வாய்ப்புறத்திலும் ஒரு கண் இருக்கவேண்டும். இல்லையேல் வாலினைப் பிடித்த கையினது பேதைமை பூனையின் பல்களின் வரிசையால் நம்முடைய இரத்தமே கொண்டு பொறிக்கப்படுமன்றோ. பாம்பின் பல்லைப் பிடித்தாலும் பிடிக்கலாம், பூனையின் வாலைமாத்திரம் இழுக்கலாகாது. பிடிக்கப்போகின்ற பல்லே கடிப்பதுமாகும் என்பதை அறிவோமாதலின் அதற்கேற்றபடி காத்துக்கொள்வோம்; மற்று, கடிப்பது வேறொன்றாயிருத்தலினால் வாலைப் பிடிப்பது விபத்தாக முடிகின்றது. இந்தச் செய்தியை இக்காலத்துப் பொதுஜன இயக்கங்களோடு சேர்த்து நோக்க நன்மையுளது.

இக்கால இயக்கங்களின் நோக்கமனைத்தும், பெரும்பாலும் 'முன்னேற்றம்' என்னுமோர் கருத்தினுள் பொதுவுற அடங்கும். இப் பூனையை வளர்க்கப் புகுகின்றனர் சில மனிதப் பிள்ளைகள். அதுவோ சிறிது வளர்ந்ததும், பிள்ளையின் விருப்பத்தின்படி எப்பொழுதும் அப்பிள்ளையின் கைக்குள்ளே அடங்கியிருக்க இசையாமல் தன்னுடைய இரையைத் தேடிக்கொள்ளப் புறப்படுகின்றது. அப்பொழுதுதான் மனிதன் அதன் வாலைப்பிடித்து இழுத்துத் தன்னருகே நிறுத்திக்கொள்ள முயல்கின்றான். வர்த்தமானப் பத்திரிகைகள் முதல், வர்த்தகத்துறைகள் விவாகமுறைகள் பள்ளிக்கூடங்கள் பாஷாபிமானங்கள் அனைய பலவற்றோடு விடுதலை சுதந்தரங்களின் நிலயமென முழங்கப்படும்சட்டசபைகள் ஈறாக யாவும்சேர்ந்துஇம்முன்னேற்றப் பூனையின் வாலாகி நிற்கின்றன. "மைந்த, பூனை போகட்டும், இவ்வாலின் எப்பாகத்தையும் பற்றி இழுக்காதே, தீதுவரும்" என இயம்புவாருளரேனும், 'வாலா கடிக்கும்' என்று மறுத்த அப்பிள்ளைபோல், சனங்கள் அதன்பொருளையும் விளைவையும் அறிந்துகொள்ளமாட்டாதவர்களாய்க் கழிகின்றனர்.

முன்னேற்றம்' என்னும் முழக்கினேடு இன்னவைகளைப் பற்றிக்கொள்வதால் வரும் கேடுகளை எடுத்தெடுத்து விளம்பியுள்ள, எமர்ஸன், ஆர்னல்ட், கார்லைல், ரஸ்க்கின், டென்னிஸன், ஸக்ரிடீஸ், ப்ளேட்டோ, அனைய எத்தனையோ பல வித்தகர்தம் வாசகங்களை இவ்விதழ்களில் வரைந்திருக்கின்ேறாம். அன்னவைகளோடு கீழ்வரும், ஹிலேய்ரி பெல்லாக் என்பவர்தம் உரையையும் சேர்த்துக்கொள்ளலாம்.—

"It is from secondary impressions divorced from reality that a contempt for the past arises and that the fatal illusion of some gradual process of betterment of progress vulgarises the minds of men and wastes their efforts. It is from secondary impressions divorced from reality that a society imagines itself deceased when it is healthy, or healthy when it is deceased. And it is from secondary impressions divorced from reality that springs the amazing power of the little second-rate public man in these modern machines that think themselves democracies."...........It is the newspapers that turn an honest fool into a jingo."

[உண்மையை முழுவதும் உணராமல் ஒவ்வோர் அம்சமே (பூனையின் வாலைப்போல) சிறிது தெரிந்திருப்பதே முன்னேற்றம் என்ற கருத்துக்கொண்டு மானுட மனம் இழிந்து முயற்சிகள் வீணுவதற்கும், நன்மையைத் தீமையென்றும் தீமையை நன்மையென்றும் மயங்குவதற்கும், ஜனநாயகங்களென்று தம்மை எண்ணிக்கொள்ளும் தற்கால எந்திரங்களில் தகுதி பெரிதில்லாத் தலைவர்கள் பலர் செல்வாக்குப் பெறுவதற்கும், காரணம் ஆகின்றது. ....யாதொன்றும் அறியாத அசடனை ஆரவாரக் கலகக்காரனுகத் திரித்துவிடுவன வர்த்தமானப் பத்திரிகைகள்—என்பது இவ் வாங்கிலவாக்கியங்களின் கருத்து.]

அல்லது, கல்வியினகலத்திலும் கருத்தினது ஆழத்திலும், நீதியின்பால் நிலைத்த நினைவிலும் மிகவுயர்ந்த லார்ட் ஆக்டன் (Lord Acton) என்பவர், வேறொரு அறிஞர் சிந்தனையைப் பின்வருமாறு எடுத்து வரைந்திருப்பதும், இங்குக் குறிப்பிடற்குரியது.

"Clever men are not wanted for the making of laws, because clever men and their laws are at the root of all mischief. Nature is a better guide than civilisation, because nature comes from God, and His works are good; culture from man, whose works are bad in proportion as he is remoter from natural innocence, as his desires increase upon him, as he seeks more refined pleasures and stores up more superfluity. It promotes inequality, selfishness, and the ruin of public spirit.

இவைபோன்ற உறுதிமொழிகள் பல இதன்முன் இவ்விதழ்களில் எடுத்து எழுதப்பெற்றிருக்கின்றனவாதலின், உதாரணங்கள் இனிப் பெருக்கவேண்டா.

இத்தனை வித்தகர் இன்னவாறு ஒத்த கருத்தினராய் உரைத்திருக்கின்ற இவைபனைய மொழிகளின் உண்மையைச் சார்ந்து, 'வர்த்தமானப் பத்திரிகைகளைப் பற்றுதீர்,' என்றும், "வர்த்தக முறைகளைத் தொடாதீர்' என்றும், 'சட்டசபைகளைக் கொள்ளாதீர்' என்றும் கூறி, "அன்னவை செய்வீரேல் அடையும் கேடு' என்று சாற்றுங்கால், "பூனையின் வாலைப் பிடிக்காதே' என்று தடுத்த அன்னைக்கு அப் பிள்ளை உரைத்த பதிலளவே பகர்ந்து மக்கள் நிற்கின்றனரே. இதற்கெதிராக, பொதுஜன மனப்பான்மையினின்றும் உயராத மக்கள் கேட்கின்ற கேள்வி, அச்சிறுவன் கேட்டதுபோன்றே இயற்கையால்மிக எளியது. வர்த்தமானப் பத்திரிகைகளா கெடுக்கும்? பள்ளிக்கூடங்களா கெடுக்கும்? சட்டசபைகளா கெடுக்கும்? வர்த்தகப் பெருக்கமா நம்மைக் கெடுக்கும்? என்பார். உலகடங்கலும் இவைகள் இருக்கின்றனவே, கெடுக்குமாயின் இருக்குமோ", என்னும் எண்ணம் ஒன்று வேறு அவர்களுக்கு அக் கேள்வியைக் கேட்பதற்கு உறுதியை அளிக்கின்றது. அதற்கென்ன—பெருவாரிநோய்களும் உலகடங்கலும் பரவியிருக்கின்றன.

'முன்னேற்றம்' என்னும் அந்தக் கருத்தே முழுப்பொய்—தாயின்றிப் பிறந்த பிள்ளையை நிகர்க்கும் அது. ஆயினும் அவ்விடயம் வேறு. இதன் பொய்ம்மையை நாம் முன்னர்ச் சிற்சில விடங்களில் விளக்கியிருக்கின்ேறமாதலின் இங்கும் விரித்துரைக்க நினைத்திலம். மற்று, அதுதான் இந்தக் கட்டுரைவரையில் எவ்வாருயினும் ஆருக. இழுக்கின்ற வாலிற்கு உரியதாகிய பூனைகடிக்கவல்லது என்பதை நினைவுபடுத்துவதே இப்பொழுது நாம் இங்கு வரைந்துவருவதன்நோக்கம்.

ஆதலின், வர்த்தமானப் பத்திரிகைகள், பள்ளிக்கூடங்கள், சட்டசபைகள், வர்த்தக கைத்தொழில் வகைகள் இவை நம்மை எப்படிக் கெடுக்கும் (கடிக்கும்?) என்று கேட்கவேண்டா. இவைகளின் தீயதன்மையை முன்னர்த் தனித்தனிவிளக்கியிருக்கின்ேறாம். இன்னவைகளில் ஊடாடும்படி நம் மனத்தைப் பழக்கப்பழக்க, அதனல் மயங்கித்திரிந்த மானுடமனமானது பொதுஜன வாழ்க்கையை இம்மை மறுமை இரண்டிற்கும் உதவாவண்ணம்கெடுக்கின்றது. அமைதி இருக்கவேண்ண்டிய இடத்தில் ஆரவாரங்களைக் கிளர்த்திவிடுகின்றன இவை. வாழவேண்டியவர்களைவழக்காளிகளாக்கிவிடுவதற்குங் காரணங்கள் இவைகளே. தெளியவேண்டிய மனம் இவைகளால் குழம்பிவிடுகின்றது. முன்னேற்றமென்னும் அப் பொய்ப்பூனை, இவ்வாலினைத் தொட்டவளவில் நம்மீது சீறி விழுகின்றது. இந்தப் பூனையை அதன் வாலினேடு போகவிடுதலே நலம். இவைகளெல்லாம் தீமையாயின் நாம் வேறு என்னதான் செய்வது என்று ஒருவரும் வினவவேண்டா. இன்னது செய்வதென்பதைத் தெரிந்து கொள்ளாதவரையில் ஒன்றுஞ் செய்யாமல் சும்மா இருப்பதே அறிவு. மனிதர் சும்மாவிருப்பாராயின், காலமே, செய்யத் தகுவதைக் கற்றுத் தரும். காலத்தின் செல்வாக்குச் சிறியதன்று. காலத்தினேடு இவ்விடயத்தில் நமக்குக் கைதந்து உதவவல்லவர்கள் கவிகளே. இதே கருத்தைப் பெல்லாக் என்பவரும் பின்வருமாறு கூறுகின்ருர்—

"Time must always ultimately teach. The Poet, in some way it is difficult to understand (unless we admit that he is a seer) is also very powerful as the ally of such an influence. He brings out the inner part of things and presents them to men in such a way that they cannot refuse but must accept it. But how the mere choice and rhythm of words should produce so magical an effect no one has yet been able to comprehend, and least of all the poets themselves."

சொற்ெருடர்களும் சீருடைய சந்தங்களும் இங்ஙனம் மனிதர்மனத்தில் நல்லுணர்வை நயமுறத் திரட்டித் தருகின்ற உண்மையைப் பின்பற்றியே இக் கலாநிலயம், புலவர்பெருமக்கள்தம் செவ்விய மொழிகளில் மனிதர் பழகுதற்குரிய சாதனங்களைச் சேர்த்துத் தருவதன்றிவேறென்றிலுங் கருத்தைச் செலுத்தாமல் காத்துவைக்க முயல்கின்றது.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[522-வது பக்கத் தொடர்ச்சி]

விரைய விளம்பவோ மறைய வருதல்.

மாங்களோடு விலங்குகளும் திகைப்படைய, சீதையின் அருகு இராவணன் சேர்தலும், அங்குநிகழ்ந்தவற்றை முதலில் வான்மீகிமுனிவர் கண்டுரைத்த வண்ணம் அறிந்தாலன்றி, கலைநலந்தெரிந்த கம்பர்தம் பாசுரங்களின் சுவை முழுவதையும் உணர்தல் அருமையாகும். சீதையைக்கண்டவுடன் இராவணன் மன்மதபாணத்தால் மொத்துண்டு அவளைப்பின்வருமாறு பலபடி புகழத்தொடங்கினன் என்று வான்மீகமுனிவர் தொடங்குகின்ருர்—

"பொன்போன்ற மேனியை உடையவராகி மஞ்சள் பட்டுடுத்துத் தாமரை ஓடைபோல அழகான தாமரை மலர் மாலையை அணிந்திருக்கும் நீங்கள் யாரம்மா? அழகான முகம்படைத்த மாதே, நீங்கள் யார்? கீர்த்தியோ? அழகோ? லக்ஷ்மியோ? அப்சரசோ? ஐசுவரியத்தின் உருவமோ? அல்லது தனது இஷ்டப்படி சஞ்சரிக்கும் ரதிதேவியோ? உங்களுடைய பற்கள் ஒன்றுபோல் எல்லாம் அழகாகவும், கூரிய முனைகளையுடையனவாகவும், வெண்மையாகவும் இருக்கின்றன. உங்கள் கண்கள் விசாலமாகவும் நிஷ்களங்கமாகவும் செவ்வரி படர்ந்தனவாகவும் கருவிழிகளுடையனவாகவும் விளங்குகின்றன. கடிபாகம் விசாலமும் பெருமனுமாயிருக்கின்றது; துடைகள் யானையின் துதிக்கைபோலத் திரண்டுபெருத்திருக்கின்றன. தனங்கள் விம்மிப் புடைத்து இறுமாந்து மணிவடங்களணிந்து பனம்பழத்துக் கொப்பாக விளங்குகின்றன. அம்மணி, உங்கள் புன்னகையும், பற்களின் அழகும், கண்களின் ஒளியும், உங்கள் மேனியும் ஆற்றுநீர் கரையைக் கரைத்துக்கொண் டோடுவதைப்போல என் உள்ளத்தை முழுதும் கவர்ந்துவிட்டன. பிடிக்கடங்கின இடையையும் அழகிய கூந்தலையும் உடையவரே, உம்மைப்போல் இவ்வளவு அழகான பெண்ணைத் தேவப் பெண்களுள்ளும், கந்தர்வ யக்ஷ கின்னரப் பெண்களுள்ளும் நான் பார்த்ததில்லை. இவ்வுலகத்தில் மிக உத்தமமான உங்கள் அழகும், இளமையும், சாயலும், நீங்கள் காட்டில் வசிப்பதும் எல்லாம் என் மனத்தை மயக்குகின்றன. தங்களிஷ்டப்படி உருவத்தை மாற்றிக்கொள்ளும் கொடிய அரக்கர்கள் வசிக்கும் காடுஇது. ஆகையால், நீங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போகவேண்டும். நகரத்திலும் பட்டணத்திலும் அழகான மாளிகையின்கண்ணும் நல்ல வாசனைநிரம்பிய பூஞ்சோலைகளிலும் நீங்கள் வசிக்கவேண்டும். உயர்ந்த மாலைகள், உயர்ந்த உணவு, உயர்ந்த புடவை, உயர்ந்த புருஷன் இவைகள் எப்பொழுதும் உங்களுக் கிருக்கவேண்டுமென்று நான் எண்ணுகின்றேன். மாதே, நீர் யார்? ருத்திரர்கள் வசுக்கள் தேவர்கள் இவர்களுள் யாரைச் சேர்ந்தவர்? நீர் தேவகன்னிகை என்றே நான் எண்ணுகின்றேன். இக்காட்டிற்குக் கந்தர்வர்கள், தேவர்கள், கின்னரர்கள் ஒருவரும் வரமாட்டார்கள். இது அரக்கர்கள் வாழும் இடம். நீர் எவ்வாறு இங்கு வந்தீர்? இவ்விடத்தில் சஞ்சரிக்கும் குரங்கு, சிங்கம், புலி, யானை, கரடி, செந்நாய் கழுதைப்புலி முதலிய விலங்குகளைக் கண்டு நீர் எவ்வாறு பயப்படாமலிருக்கிறீர்? இந்தக் காட்டில் தனியே இருந்துகொண்டு இவ்விடத்தில் சஞ்சரிக்கும் வெகு பலம்பொருந்திய பயங்கரமான மதயானைக் கூட்டங்களைக் கண்டு எப்படி நீர் பயப்படாமலிருக்கிறீர்? நீர் யார்? யாரைச் சேர்ந்தவர்? எங்கிருந்து வந்திருக்கிறீர்? என்னத்திற்காகக் கொடிய அரக்கர்கள் சஞ்சரிக்கும் இத்தண்டகவனத்தில் தனிமையாக வசித்துக்கொண்டிருக்கிறீர்? என்ருன்.

சீதை, தன்னைக் கவர்வதற்காகச் சந்நியாசி வேஷம் பூண்டு வந்த இராவணன் இன்னவ்வாறு கேட்க, தனக்குள்ளே "இவரோ நமது அதிதி. மேலும் பிராமணர். கேட்டதைச் சொல்லாவிடில் இவர் நம்மைச் சபிப்பார்" என்று கொஞ்சநேரம் யோசித்துப் பின் அவனைப் பார்த்துச் சொல்லலுற்ருள்:—"உங்களுக்கு நன்மையுண்டாகுக. நான் மிதிலைக்கு அரசனுன மகாத்துமாவாகிய ஜனகமகாராஜாவின் குமாரி; இராமருடைய அன்பான மனைவி. என் பெயர் சீதை. இக்ஷ்வாகு வம்சத்தரசர்கள் மாளிகையில் பன்னிரண்டு வருஷகாலம் வசித்துப் பலவித போகங்களையும் அனுபவித்து என்னுடைய இச்சைகள் எல்லாம் நிறைவேறப்பெற்றேன். பிறகு, பதின்மூன்ரும் வருஷத்தில் தசரதமன்னரானவர் தமது மந்திரிமார்களுடன் யோசித்து இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கத் தீர்மானித்தார். அவ்வாறு பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் வந்து சித்தமாயிருக்கும் பொழுது எனது மாமிமார்களுள் ஒருத்தியாகிய கைகேயி தனது கணவனிடம் ஒரு வரம் கேட்டாள். அவள், சத்தியவந்தராகிய ராஜோத்தமருக்குத் தான் செய்த உபகாரத்தை நினைப்பூட்டி அவரைத் தன் வசப்படுத்திக் கொண்டு என் கணவனைக் காட்டுக்கு அனுப்பவேண்டும் என்றும், பரதனுக்குப் பட்டங் கட்டவேண்டுமென்றும் இரண்டுவரங்களைக்கேட்டு "இராமன் பட்டத்துக்கு வருதாக இருந்தால் நான் புசிக்கவும் மாட்டேன், தீர்த்தபானம் செய்யவும் மாட்டேன், தூங்கவும் மாட்டேன், என்னுயிரை மாய்த்துக்கொள்வேன்" என்று சொன்னுள். இவ்வாறு கைகேயி சொல்ல மகிபதியாகிய என் மாமனுர் அவளைப் பலவித செல்வங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டினுர். அவள் அதற்கு உடன்படவில்லை. அப்போது என் கணவனுக்கு வயது இருபத்தைந்து; எனக்கு வயது பதினெட்டு. என் கணவர் இராமர் என்னும் பெயரால் உலகமெங்கும் புகழ்பெற்றவர். அவர் சத்தியமும், நற்குணமும், நல்லொழுக்கமும், பரந்த விழியும் நீண்ட கைகளும் உடையவர்; பிராணிகளுக்கெல்லாம் எப்பொழுதும் நன்மையே செய்பவர். அப்படியிருந்தும் வெகு பராக்கிரமம் பொருந்தியவராகிய என் மாமனுராகிய தசரதர் கைகேயியின் மனம் கோணுமலிருக்கவேண்டி இராமருக்குப் பட்டாபிஷேகம் பண்ணவில்லை. பட்டாபிஷேக நிமித்தமாகத் தந்தையிடம் சென்ற என் பர்த்தாவாகிய இராமரைப் பார்த்துக் கைகேயி "இராகவா, உனது தந்தை என்னிடம் செய்திருக்கும் கட்டளையைக் கேள். ஒருவித இடைஞ்சலின்றி இந்த இராச்சியம் பரதனுக்காகவும் நீ எழிரண்டாண்டு காட்டில் உறையவும் வேண்டுமாம். ஆகையால் நீ அவ்வாறு சென்று உனது தந்தையினுடைய வார்த்தையைக் காப்பாற்றிவைப்பாயாக" என்று இக் கொடுஞ்சொற்களைச் சொன்னுள். என் கணவராகிய இராமர் அவ்வாறே ஆகுகவென்று அவளுடைய வார்த்தையை அங்கீகரித்து விரதம் பூண்டு இவ்விடம் வந்துசேர்ந்தார். அவர் எப்பொழுதும் வேண்டுபவர்களுக்கு அவர்கள் வேண்டும் பொருளைக் கொடுப்பவரேயன்றி ஒருவரிடமிருந்து தாம் ஒன்றையும் வேண்டுபவரல்லர். அவர் எப்போதும் உண்மையையே பேசுபவர்; பொய்யுரைப்பவரல்லர். ஐயா அந்தணரே, இவைகளே இராமருடைய சிறந்த விரதங்கள். இராமருடைய இளையதாயார் வயிற்றிற் பிறந்த தம்பி லக்ஷ்மணர்.

அவர் இராமருக்கு உதவியாயுள்ளவர்; சத்துருக்களை வதைக்கும் வல்லமை பெற்றவர்; வெகு பராக்கிரமசாலி. அவ்வுத்தமர் மிக்க உறுதியும் சீலமும் உடையவர். அவர் கையில் வில்லேந்தி, என்னுடன் காட்டுக்குப் புறப்பட்ட தமது தமையனாரைத் தொடர்ந்து வந்தார். இவ்வாறு ஐம்புலன்களையும் அடக்கித் தருமத்தை இடைவிடாது நடத்தும் இராமர் சடைபுனைந்து தவவேடம் பூண்டு தமது தம்பியோடும் என்னோடும் இந்தத் தண்டகாரணியத்துக்கு வந்துசேர்ந்தார். ஐயா பிராமணோத்தமரே. இவ்வாறு நாங்கள் மூன்றுபேரும் கைகேயினால் இராச்சியம் அபகரிக்கப்பட்டவர்களாகி எங்கள் பலத்தின் மகிமையால் இப் பயங்கரமான தண்டகாரணியத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். தாங்கள் இங்கே சற்றுத் தங்கி இளைப்பாறுங்கள். எனது கணவர் காட்டிலுள்ள கந்த மூல பலங்களையும் மான் பன்றி முதலானவைகளைக் கொன்று போதுமான இறைச்சியையும் எடுத்துக்கொண்டு இதோ திரும்பி வந்துவிடுவார். தாங்கள் தங்கள் பெயர், கோத்திரம், குலம் முதலியவைகளைத் தயவுசெய்து எனக்குத் தெரிவிக்கவேண்டும். ஓ அந்தணரே, யாது காரணத்துக்காக நீர் இந்தத் தண்டகாரணியத்தில் தனிமையாகத் திரிகின்றீர் ?

“இவ்வாறு இராமருடைய மனைவியாகிய சீதை சொல்ல வெகு பலசாலியாகிய அரக்கர் வேந்தன் விரைந்து கூறலுற்றான்:—“சீதாய், நான் இராவணன்; அரக்கர் மன்னவன். தேவர்கள், அசுரர்கள், மானுடர்கள் யாவரும் அஞ்சுபவன். பொன்போலும் மேனியுடையவளும் பட்டுடுத்துள்ளவளுமாகிய உன்னைக் கண்டதுமுதல் நான் எனது மனைவிமார்கள்மேல் ஆசையை முழுதும் ஒழித்துவிட்டேன். நான் பல இடங்களிலிருந்து அநேக அழகான பெண்களைக் கொண்டுவந்து வைத்திருக்கிறேன். அவர்களெல்லாருக்கும் நீ தலைவி ஆகுவாயாக. சமுத்திரத்தில் நடுவில் நாலுபுறமும் கடலால் சூழப்பட்டு மலையின் சிகரத்தில் அமைக்கப்பட்ட இலங்கை எனது ராஜதானி. சீதே, அவ்விடத்தில் நீ என்னுடன் சிங்காரவனத்தில் சந்தோஷமாக உலாவலாம். அப்பொழுது நீ இந்தக் காட்டில் வாழ எண்ணமாட்டாய்; சீதே, நீ என்னுடைய மனைவி ஆய்விட்டால் நல்ல ஆடையாபரணங்கள் அணிந்த ஐயாயிரம் பணிப்பெண்கள் உனக்குப் பணிவிடை செய்வார்கள்.”

மற்றவெல்லாங் கிடக்க, ‘யார்’ என்று கேட்டவளவில் தன்னை “நான் இராவணன்” என்று மறைக்காமல் விளம்புதற்கு உளங்கொண்டிருந்த இவ் வரக்கன், எற்றுக்கு ஓர் துறவியின் வேடம் மிகப்புனைந்து வந்தானோ சிந்தனை தெரியவில்லை. பொய்யுடைய நெஞ்சினன் மெய்புனைந்த வேடத்தால் மடவரல் சீதையை வஞ்சிப்பான் புகுந்தவளவில், அவளது அழகின் பெருக்கம் அவன் கருத்தை அழித்துவிட அவசமுற்று, அற்றங்காக்கு மாற்றலிலனாகித் தன் பெயரைப் பரக்கப் பேசிவிட்டனன், என இந் நாடகவழுவினை யழித்து அமைதிகூறற்கு உரைகாரர் யாரேனும்முயன்றிருப்பாராயின் அன்னவர்க்கு வான்மீகிமுனிவர் நன்றி நனிசெலுத்தக் கடப்பாடுடையவராதல்வேண்டும். வேடம் கிடக்க வாய்மையை விரைந்து விளம்புகின்ற இவ் வடநூல் இராவணனுக்கு இணையாகச் சீத்தலைச் சாத்தனார் ஆக்கிய தமிழ்ப்பெருங் காப்பியம் ‘மணிமேகலையினுள்’ ஓர் இந்திரனும் புகுந்துளன். சிந்தாதேவி அருளிய மாபெரும் பாத்திரங்கொண்டு ஆபுத்திரன் எண்ணற்கரிய தானங்கள்செய்து மன்னுயி ரோம்பு நாள்—

ஈண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கிய தாதலில்
தளர்ந்த நடையில் தண்டுகா லூன்றி
வளைந்த யாக்கையோர் மறையோ னாகி
மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பும்
ஆருயிர் முதல்வன் தன்முன் தோன்றி
இந்திரன் வந்தே னியாது நின்கருத்
துன்பெருந் தானத் துறுபயன் கொள்கென
வெள்ளை மகன்போல் விலாவிற நக்கீங்
கெள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோன்

[நெருங்கிய நீரால் சூழ்ந்த பூமியில் இவ் வாபுத்திரன் செய்த தானச்செயல்களை இந்திரனது ஆசனமாகிய வெள்ளைக்கம்பளம் அசைந்துஅவனுக்குக் காட்டியது ஆதலால், அக்குறிப்பை யறிந்து, சீலமுடைய பௌத்தர்களுக்கு அருள்செய்யும் கடப்பாடுடையவனாகிய இந்திரன், நடைதளர்வதால் கோலைக் காலாக ஊன்றி, முதுமையால் வளைந்த உடலையுடையவோர் அந்தணன் உருவத்தை எடுத்துக்கொண்டு, பெரிய இவ்வுலகத்தில் உள்ள உயிர்களைக் காத்துவரும் ஆபுத்திரன்முன் தோன்றி, “இந்திரன் நான் இதோ வந்திருக்கின்றேன், உன் எண்ணம் என்ன” என்று வினவ, அவ்வாபுத்திரன், பித்தனைப்போல் தன் விலா அறும்படி சிரித்து, “சே! உன்னை இகழ்ந்தேன், போ” என்று துவக்கி மேலுஞ்சொல்லுவான்—]

“இந்திரன் வந்தேன்” என விளம்ப நேர்பவன் என்னினைத்து ஓர் அந்தண முதியோன் வேடத்தை வருந்திப் புனைந்தனனோ எனப் பரிகசித்தே, ஆபுத்திரன், விலாவிற நக்கனன் போலும். அவசமுற்ற இராவணன் தன் வேடத்தை அயர்ந்து உண்மையைப் பகர்ந்தானென்றுரைக்கவல்ல அமைதியும் அவ் விந்திரன்திறத்தில் காணலரிது. “நான் இராவணன்” என்று அவ் வரக்கமன்னன் இயம்பியவுடன் சீதையும் விலாவிறச் சிரிக்கவில்லையெனின், அவளிருந்த நிலைமையின் துன்பந்தான் அதற்குக் காரணமாதல் வேண்டுமெனக் கருதலாம்.

ஏமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

காற்று மழை

Shakespeare—“The Tempest”

[525-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 2.

இடம்:—அந்தத் தீவின் மற்றோர் புறம்.

[விறகுப் பொதியைச் சுமந்துகொண்டு காலிபன் வருகின்றான். இடிமுழக்கம் கேட்கின்றது]

காலிபன்:—சகதி சேறு பரப்புத் தரைகளிலிருந்து சூரியன் உறிந்துகொள்ளும் நோய்களெல்லாம் ப்ராஸ்ப்பரின்மீது வீழ்ந்து கணுக்குக்கணு அவனை ஓர் பிணியாக்கட்டும்! (1)—அவன் ஏவற்பேய்கள் இதனைக் கேட்டுக்கொண்டிருக்கின்றன, எனினும் நானவனைச் சபிக்காம லிருக்கலாற்றேன் (2). ஆயினும், அவன் கட்டளையிட்டாலன்றி, அவை என்னைக் கிள்ளுவதுமில்லை, முள்ளம்பன்றித் தோற்றத்தால் என்னை அச்சுறுத்துவதுமில்லை, என்னைச் சேற்றில் தள்ளுவதுமில்லை, கொள்ளிபோல் தோன்றி என்னை இருளில் வழிதப்பிச் செலுத்துவதுமில்லை (3). ஆயினும், அற்பத்திற்கெல்லாம் அவைகளோ என்மீது ஏவப்படுகின்றன; ஒருபோது அவை வாலில்லாக் குரங்குகள்போல் வந்து அழகு காட்டிக் கூச்சலிட்டுப் பிறகு என்னைக் கடிக்கும். பிறகு, முட்பன்றிகளாகி, என் வெற்றடி வழியில் உருண்டுகிடந்து நான் கால்வைக்குமளவில் தம் (4) முள்களை ஏற்றும். பிளந்த நாவுடன் என்னைப் பித்தேறச் சீறுகின்ற விரியன் பாம்புகளால் ஒருபோது நான்முற்றிலும் சுற்றிக்கொள்ளப்பட்டிருப்பேன் (5)—பார் பார், இதோ, பார்! அவன் ஏவற்பேய்களிலொன்று இதோ, விறகினை நான் மெலல மெல்லக் கொணர்வதன்நிமித்தம் என்னைத் துன்புறுத்த வருகின்றது. தரையுடன் தரையாய் விழுந்துவிடுகின்றேன், ஒருகால் என்னைப் பார்க்காமற் போகலாம் (6).

[தரையில் படுத்துக்கொள்கின்றான்]

[ட்ரின்குலோ வருகின்றான்] (7)

ட்ரின்குலோ:—வெயில் மழை எதனையும் தப்புவதற்கு இங்கே புதருமில்லை பூண்டுமில்லை; இன்னொரு கடுமழையோ கூடுகின்றது. வாடையுள் அதனை நான் பாடக் கேட்கின்றேன் (8). அதோ அந்தக் கரிய மேகம், அதோ அப் பெரியதொன்று, தன் சாராயத்தைச் சொரியவரும் ஒரு அழுகியதோற்பையைப்போல் தோன்றுகின்றது (9). முன்னே செய்ததுபோல் அது இடிக்குமாயின், என் தலையை எங்கே ஒளிப்பதென்றறியேன். அதோ அந்த மேகம் சால்சாலாக வீழாமல் தீராது.—இதுவென்ன இது இங்கே நமக்கிருப்பது (10)! மனிதனோ அல்லது ஒரு மீனோ? உயிருடனோ இறந்துபட்டோ? மீன்தான்: மீன்போல நாறுகின்றான். மிகமிகப் பழையவோர் மீனின் நாற்றம். புத்தம் புதிய புலாலுணங்கல் வகையைச் சேர்ந்தது அன்று இது (11). முன்னொருதரம் இருந்ததுபோல் நான் இப்பொழுது இங்கிலாந்தில் இருப்பேனேயாயின், இந்த மீனை வண்ணமுந் தீட்டிவைத்துவிட்டால், அங்கு, வெள்ளிக்காசொன்று கொடுப்பவன் அல்லால்விழவாடுமடையனொருவனில்லை (12). இவ்

(1) காலிபன் வரும்பொழுதே ப்ராஸ்ப்பீரோவைச் சபித்துக்கொண்டு வருகின்றான். பேசக் கற்றதன் பயன் அவனுக்கு அது தானே.

சகதி - சேற்றுத்தரை. சேற்றிலிருந்து நோய்களைச் சூரியன் உறிந்து எடுக்கின்றதென்று காலிபன் கருதுகின்றான். அந்த நோய்களெல்லாம் ப்ராஸ்ப்பீரோவின் மீது விழுந்து, கணுக்கணுவாய் உறுப்பு உறுப்பாய் வருத்திப் பிறகு அவனே ஒரு பிணிப்பொதி யாகிவிடட்டும்—என்பது இவன் இடும் சாபம்.

ப்ராஸ்ப்பீரோ என்னத் தெரியாமல், காலிபன் ‘ப்ராஸ்ப்பர்’ என்று அவன் பேரைக் குறுக்கிக் கூறுகின்றான்.

(2) ப்ராஸ்ப்பீரோவின் ஏவலுக்குட்பட்ட சயித்தான்கள் நான் சொல்வதைக் கேட்கின்றன ஆயினும், என்னுடைய எரிச்சலை அடக்கமுடியவில்லையாகையால் நான் அவனைச் சபித்துத்தான் தீரவேண்டியிருக்கின்றது.

(3) ப்ராஸ்ப்பீரோ, தன் சயித்தான்களை ஏவிக் காலிபனை, அவன் செய்த குற்றத்திற்குத் தண்டனையாகத் துன்புறுத்தும் விதங்கள் இவை. சயித்தான்கள் தான் சொல்வதைக் கேட்கின்றனவாயினும் ப்ராஸ்ப்பீரோவின் கட்டளையாலன்றித் தன்னை அவைஒன்றும் செய்வதில்லையாகையால், காலிபன், சிறிது அச்சம் தவிர்கின்றான்.

(4) வெற்றடி வழியில்=செருப்பணியாமல் நான் வெறுங் காலால் நடக்கும் வழியில்.

(5) குரங்காய் உருவெடுத்துவந்து இவனை அழகுகாட்டுவதும், முள்ளம்பன்றியாய் வந்து கால்களில் தைப்பதும், பாம்பாகி வந்து சுற்றிக்கொள்வதும், ப்ராஸ்ப்பீரோவின் சைத்தான்கள் செய்யும் சேஷ்டைகள்.

நான் பித்தேறச் சீறுகின்ற=பைத்தியம் பிடித்தவன் போல் நான் ஆகும்வரையில் சீறிச் சீறி என்னைப் பயமுறுத்துகின்ற பாம்புகள்.

(6) வருகின்ற ட்ரின்குலோவை, ப்ராஸ்ப்பீரோவின் ஏவற்பேய் என்று பயந்த காலிபன், தரையிலே படுத்து மறைய முயல்கின்றான்.

(7) ட்ரின்குலோ என்பவன், அலான்ஸோ மன்னனது அரண்மனையைச் சார்ந்தவோர் விதூஷகன். (விதூஷகன்=அரசனுடனிருந்து எப்பொழுதும் பரிகசப் பேச்சுக்கள் பேசிக்கொண்டிருப்பவன். உடைபட்ட கப்பலிலிருந்த இவன் கரைசேர்ந்து தனியே திரிந்து இங்கு வந்தடைகின்றான். வடமொழி நாடகங்களிற் போல், ஷேக்ஸ்ப்பியர் நாடகங்கள் பலவற்றுள் விதூஷகனும்ஒரு பாத்திரமாக அமைவதுண்டு.

(8) ‘உஸ்’ என்று காற்றடிக்கும் ஒலி கேட்கின்றது. பெய்ய வருகின்ற கடுமழையானது வாடைக் காற்றுக்குள் புகுந்துகொண்டு பாடுகின்ற பாட்டு என்று ட்ரின்குலோ அவ்வொலியைக் கூறுகின்றான்.

(9) மேகத்தின் தோற்றத்தை, சாராயம் வைக்கும் தோற்பைக்கு நிகராகக் கூறுகின்றான்.

(10) இனி வருவன, கீழே கிடக்கின்ற காலிபனைப் பார்த்து ட்ரின்குலோ சொல்பவை.

(11) புலால் உணங்கல்=மீனை உப்பிட்டு உலர்த்தி வைக்கும் வற்றல். இதனிலிருந்து வரும் நாற்றம் புத்தம் புதிய வற்றலிலிருந்து வருவதுபோல் இல்லை, என்பதால் மிகப் பழையவோர் அழுகிய மீன்முடை வீசுகின்றதென்ற பொருள் தோன்றுகின்றது.

(12) விழவாடு மடையன் - சென்னையில் நடக்கும் Park fair போன்ற சந்தைகளை நாடி விநோதக்காட்சிகள் காண்பதாக எண்ணித் திரியும் மூடன். இங்கிலாந்தில் இந்த வழக்கம் மிகவும் அதிகம். காணத் தகாதவைகளையெல்லாம் காசு கொடுத்துப் பார்க்க விழைவார். ட்ரின்குலோ, இட்டலிநாட்டு நேப்ல்ஸ் நகரத்தவன், ஆங்கிலேயரை இங்ஙனம் பரிகசிக்கின்றான். நான் இந்த மீனைக் கொண்டுபோய் இங்கிலாந்துதேயத்தில் விநோதக்காட்சியாக வைப்பேனேயானால் அத்தனைபேரும் இதனைக்காசு கொடுத்துப் பார்ப்பார்—என்பது பொருள்.

இந்த மீனை வண்ணமுந் தீட்டி வைத்துவிட்டால்—என்பது முதனூலிற் போன்றே இம்மொழிபெயர்ப்பிலும் இரு பொருள்பட நிற்கின்றது:—(1) பின்னும் விநோதமாய்த் தோன்றும்பொருட்டு இம் மீனிற்குப் பலவேறு

விருபம் அங்கு எவனையும் ஒரு ஆளாக்கிவிடும் (13) வம்பாய விலங்கு எதுவாயினும் அங்கே அது மனிதனைப் படைக்கின்றது (14). பிச்சைக்காரமுடவனுக்குக் காசொன்று கொடுத்துதவ மனங்கொள்ளாத அவர், செத்த இந்தியனைப் பார்க்கப் பத்துக்கொடுப்பார் (15). மனிதனைப்பேன்ற காலது! இதன் செட்டைகள் கைகள்போலும் (16). நிச்சயம், சூடாகவுமிருக்கின்றது (17). இப்பொழுது நான் என் அபிப்பிராயத்தை அவிழ்த்து விட்டுவிடுகின்றேன், இனி அதனைப் பிடித்துவைக்க இயலாது,—இது மீனென்றும் அன்று, சற்றுமுன்பே இடியேறு உண்டு கிடக்கும் இத்தீவினன் ஒருவனே (18). [இடிமுழக்கம் கேட்கின்றது] ஐயோ, காற்றுமழை மீண்டும் வந்துவிட்டதே! இவனது அங்கியின்கீழ் நுழைந்துகொள்வதே எனக்குச் சிறந்தவழியாகும்; சுற்றுவட்டத்தில் வேறு ஒதுங்குமிடம் ஒன்றுமில்லை. இடுக்கணே ஒருவனை இயல்பலாப் படுக்கைத்தோழர்களோடு பழக்கம்செய்துவைக்கின்றது (19). மழையின் வண்டலெல்லாம் கழியும்வரை நானிங்கே மூடிக்கொள்வேன். (20)

[காலிபனினது அங்கியிற்குள் புகுந்துகொள்கின்றான்]

[ஸ்ட்டிபானோ, கையில் ஒரு புட்டியுடன் பாடிய வண்ணமாய் வருகின்றான்] (21)

ஸ்ட்டிபானோ:—(பாடுகின்றான்)

கடற்கோ கடற்கோ இனிப்போகேன்
இங்கே கரையிற் சாவேனே (22)

ஒருவனது சவச்சடங்கில் பாடுதற் கிதுவோர் ஆபாஸ இராகம்: (23). நல்லது, இதோ இருக்கின்றது எனக்கு ஆறுதல். (24)

[குடிக்கின்றான்]

(மீண்டும் பாடுகின்றான்)—

மாஸ்ட்டர் ஸ்வாபர் போஸனும்
நானுங் கன்னரு மவன்மேட்டும்
மாலை மெக்கை மேரியனைப்
பின்னு மந்த மார்ஜரியைக்
காத லித்தோ மானாலோ
கேட்டை யாரும் மதித்திலமே
ஏனென் றென்னைக் கேட்டாலோ
சொல்வே னின்றே காரணத்தை.

கூவும் நாவைக் கொண்டிருந்தாள்
கப்பல் ஆளைக் கண்டாலோ
போய்ச்சா வென்றே மிகவெறுத்துக்
கழறிக் கடிந்து தீர்த்திடுவாள்
தாரின் பிச்சின் மணமொன்றும்
அவளோ சற்றும் விரும்பவில்லை
ஆயின் மக்காள் கடல்சேர்வீர்
அவளே சென்று சாகட்டும். (25).

இதுவும் ஆபாஸ இராகந்தான். ஆயினும் இதோ இருக்கின்றது என் ஆறுதல்.

காலிபன்:—ஐயோ, என்னை வதைக்காதே (26).

ஸ்ட்டிபானோ:—இதுவென்ன இது? இங்கே நமக்குப் பேய்களும் இருக்கின்றனவா? காட்டுமிராண்டிகளையும் இந்திய மனிதரையுங் கொண்டு எங்கள்மீது தந்திரவித்தை செய்கின்றாயோ? (27) உன் நான்கு கால்களைக் கண்டு இப்பொழுது அஞ்சுவதற்கு அன்று நான் முழுகாமல் தப்பினேன் (28)! ஏனெனில், நான்கு கால்களின்மீது எக்காலத்திலும் நடந்த மனிதரிற் றருந்த எவனும் அவனை இடங்கொடுக்கச்செய்ய இயலாதென்று சொல்லப்பட்டிருக்கின்றது; ஸ்ட்டிபானோ மூக்கிலே மூச்சாடும்வரையில் மீண்டும் அப்படியே சொல்லப்படும். (29).

வர்ணங்களைப்பூசி, மீனின் இயற்கை வர்ணம் இப்படிப்பட்டதே என்று வஞ்சிப்பது. (2) வருவோர் போவோர் கண்களைக்கவரும்படி இம் மீன்போன்றவோர் உருவம் வரைந்து யாவருங் காணக் காட்சிச்சாலையின் வெளியே வைப்பது. படத்தைப் பார்த்தவர், காசுகொடுத்து உட்சென்று மீனையே பார்க்கவருவார்—என்பது கருத்து. படத்தில் தான் பார்த்தாயபின் இனிக் காசு செலவுசெய்து அதனை நேரே பார்க்கவருவது மூடத்தனமன்றோ—என்றபரிகசம் இதனில் அடங்கியிருக்கின்றது.

(13) விருபம் - இயற்கைக்கு மாறான உருவம் உடையது. ஆளாக்கிவிடும் - பணக்காரப் பெரியமனிதனாக்கிவிடும். விருபமான இதனை (காலிபனை) இங்கிலாந்திற்குக் கொண்டுபோய் அபூர்வக் காட்சியாக வைப்பேனேயானால், திரள்திரளாக அதனைப் பார்ப்பதற்கு வருகின்றவர் கொடுக்கும் பொருளால் நான் மிக விரைவில் பணக்காரனாகிவிடுவேன்—என்பது பொருள்.

(14) வம்பாய - புதுமையான. மனிதனைப் படைக்கின்றது - மனிதனாக்குகின்றது - அம் மிருகம் தன்னை உடையவனைப் பணக்காரனாக்குகின்றது. விலங்கு மனிதனைப் படைக்கின்றது—என்று வாக்கியம் விபரீதமாக அமைந்திருப்பதன் பரிகசம் கருதற்குரியது.

(15) அவர் - இங்கிலாந்து தேசத்தவர். இந்தியன் - நம் இந்திய தேயத்தவனைக் குறிக்கவில்லை. அமெரிக்காவிலிருந்த சிவப்புஇந்திய சாதியாரைக் குறிக்கின்றது.

(16) காலது - கால்களையுடையது. செட்டை - மீனின் சிறகு.

(17) ட்ரின்குலோ காலிபனைத் தொட்டுப்பார்த்து, சூடாக இருக்கின்றதே, மீனாக இருந்தால் குளிர்ச்சியாக அன்றோ இருத்தல் வேண்டும், என்று ஆராயப்புகுகிறான்.

(18) முன் மீனென்று எண்ணியிருந்த அபிப்பிராயத்தை அவிழ்த்து ஓட்டிவிட்டேன், ஏனெனில் இனி இதனை மீனென்று கருத இயலாது, என்றும் பொருள்படலாம்; அல்லது, மனிதனென்று நிச்சயமாகிவிட்டது, இனி அந்த அபிப்பிராயத்தை அடக்கிவைக்காமல் விளம்பிவிடுவேன் என்றும் பொருள்படலாம்.

தீவினன் - இந்தத் தீவில் வசிப்பவன்.

(19) கஷ்டகாலம் வந்தபோது நாம் இன்னார் இனியார் என்று பார்க்காமல் கண்டவர்களையெல்லாம் கட்டிப்புரள நேர்கின்றது, என்று சொல்லிக்கொண்டே ட்ரின்குலோ, இடிக்குப் பயந்து காலிபனின் அங்கிக்குள்ளே புகுந்து ஒளிந்துகொள்கின்றான்.

(20) மழை முழுவதும் பெய்து ஓயும்வரையில் நான் இங்கே ஒளிந்திருப்பேன்—என்பது பொருள்.

(21) ஸ்ட்டிபானோ-அலான்ஸோவின் பட்லர் (Butler). புட்டி - Bottle. கப்பல் உடைந்தபோது தன்னைத் தவிர மற்றெல்லாரும் இறந்துவிட்டனரென்றுஎண்ணினவனாய் இவனும் வருகின்றான்.

(22) களத்தில் வந்தபோது அவன் பாட்டின் நான்காவது அடிமாத்திரந்தான் கேட்கின்றது. மற்ற மூன்று அடிகளையும் உள்ளே பாடிவிட்டான் என்று கொள்ள வேண்டும். கப்பல் உடைந்து தடுமாறிய பயத்தால், நடுங்குகின்ற இவன், "இனி நான் கடல்மீது போகமாட்டேன், சாவதாயின் கரையில் இத்தரையில்தான்சாவேன்"—என்பது இதன் பொருள்.

(23) "சாவேனே" என்றதால், தன் சவச்சடங்கு (உத்தரகிரியை) நடப்பதாகவும், அதனில் பாடுவதற்கு இந்த ராகம் பொருத்தமா யில்லை என்றும் விட்டுவிடுகின்றான்.

(24) ஆறுதல் - துன்பத்தை மறக்கச்செய்வது, அது இங்கே தன் கையில் உள்ள சாராய புட்டி.

(25) மாஸ்ட்டர், ஸ்வாபர், போஸன், கன்னர், மேட்—இவை கப்பலில் உள்ள பலவகை உத்தியோகத்தினருடைய பெயர்கள். துறைமுகம் சேர்ந்து கப்பல் தங்கியிருக்கும் காலத்தில், கப்பல் உத்தியோகஸ்தர் மாலுமிகள் ஆள்கள் முதலாயினோர், கரைக்குவந்து அங்குள்ளபெண்களைத் தொடர்ந்து சரசங்கள் செய்வது வழக்கம். மால், மெக், மேரியன், மார்ஜரி, கேட் என்பன பெண்களின் பெயர்கள். நாங்களனைவரும் சேர்ந்து, இவர்களில், மால் மெக் மேரியன் மார்ஜரி என்ற பெண்களைக் காதலித்து விளையாடினோம். ஆனால் கேட் என்னும் ஒருத்தியைமாத்திரம் நாங்கள் மதிக்கவில்லை. ஏனென்றால் அவளுடைய நாக்குப் பொல்லாதது. கப்பல்தொழில் செய்கின்ற யாராயினும் அவளைநெருங்கினால், "போய்ச்செத்துத்தொலையுங்கள்" என்று எங்களைத் துரத்திவிடுவாள். ஏனெனில், கப்பலுக்குப் பூசுகின்ற, தார் (tar) பிச்சு (pitch) முதலியவைகளின் நாற்றத்தை அவள் மூக்குப் பொறுப்பதில்லை. கப்பலில் பழகுகின்றவர்களிடத்திலும் இந்நாற்றம் வருமென்று அவர்களை வெறுக்கின்றாள். ஆதலால், மக்களே, நாம் கடலுக்கு மீண்டு கப்பலைச் செலுத்திப் போவோம். அவள்தான் போய்ச் சாகட்டும்—என்பது இப்பாட்டுக்களின் பொருள். மாலுமிகள், தம்முள், "மக்களே" என்று அழைத்துக்கொள்வது மரபு.

(26) தன் பக்கத்தில் நெளிகின்ற ட்ரின்குலோவை நோக்கிச் சொன்னது.

(27) காலிபன் கத்தியதுகேட்ட ஸ்ட்டிபானோ கீழே பார்த்து, பேயோ, காட்டுமிருகாண்டியோ, யாதோ என்று ஐயங்கொண்டு கூறுவது.

இந்தியமனிதர் - அமெரிக்காவிலிருந்த சிவப்பு இந்தியர்.

(28) காலிபனின் கால்களும் ட்ரின்குலோவின் கால்களும் வெளியில் தெரிய, ட்ரின்குலோவின் உடல் காலிபனது அங்கிக்குள் மறைந்திருப்பதால், ஸ்ட்டிபானோ, காலிபனை நான்கு கால்களுடைய வொரு விருபம் என்று கருதுகின்றான். கடலுக்கே பயப்படாமல் தப்பின நானா உன் நான்கு கால்களைக் கண்டு இப்பொழுது பயப்படப் போகின்றேன்!—என்று கூறுகின்றான்.

(29) அவனை—ஸ்ட்டிப்பானோ தன்னையே படர்க்கையில் குறித்துப் பேசுகின்றான். இடங் கொடுத்தல் = பயப்பட்டு இடம்விட்டு ஓடுதல். "நான்கு கால் மனிதனாலும் ஸ்ட்டிபானோவை அச்சுறுத்த முடியாது" என்று சொல்லப்பட்டிருக்கின்றதாம். அச்சொல்லை மீண்டும் இப்பொழுது நிலைநிறுத்துவானாம்—குடிவெறியால் கிளம்பும் வீர வார்த்தைகள் இவை.

காலிபன்:—சைத்தான் என்னை வதைக்கின்றதே—ஐயோ! (30)

ஸ்ட்டிபானோ:—இது ஏதோ இத் தீவிலுள்ள வோர் நான்குகால் விருபம்; குளிர்ச்சுரம் கொண்டிருக்கின்றதென்று எண்ணுகின்றேன். எம்முடைய பாஷையை இவன் எப்படிக் கற்றிருக்கக்கூடும்? அதற்காகவேனும் நானிவனுக்குச் சிறிது உதவி செய்வேன். இவனைப் பிழைப்புமூட்டிப் பழக்கிவைத்து நேப்ல்ஸிற்கு இவனோடு சென்று நான் சேரக்கூடுமானால், மாட்டுத் தோலின்மீது மிதிக்கும் மன்னர்மன்னவன் எவனுக்கும் இவனொரு காணிக்கை யாவான். (31).

காலிபன்:—வேண்டிக்கொள்கின்றேன், என்னை வதைக்காதே. விறகினை வீட்டிற்கு விரைவிற் கொணர்கின்றேன்.

ஸ்ட்டிபானோ:—இழுப்பு வந்திருக்கின்றது இவனுக்கு இப்பொழுது; அறிவிற் சிறந்தவரைப் பின்பற்றி இவன் பேசவில்லை (32). என் புட்டியிலிருந்து சுவைக்கட்டும் இவன்: இதன்முன் இவன் ஒருபோதும் சாராயம் குடித்ததில்லையாயின், இவனுடைய இழுப்பைத் தீர்ப்பதற் கிது நெருங்கிச்செல்லும் (33). இவனைப் பிழைப்புமூட்டிப் பழக்கிவைக்கக்கூடுமாயின் அவனுக்காக நான் அளவுகடந் தொன்றும் அதிகங் கொள்ளமாட்டேன்; (34) இவனை வைத்துக்கொள்பவன் விலை கொடுக்கவேண்டும், அதுவும் பூர்த்தியாக (35).

காலிபன்:—இதுவரையில் எனக்கு நீ அவத்தைசெய்யவில்லை, இனிச் செய்வாய். உன்னுடைய நடுக்கத்தால் அறிகின்றேன் அதனை. இப்பொழுதுதான் ப்ராஸ்ப்பர் உன்மீது ஏவல்செய்கின்றான். (36)

ஸ்ட்டிபானோ:—வா வா, உன் வழிக்கு வா. வாயைத் திற; ஏ பூனையே, உனக்குப் பேச்சுக் கொடுக்க வல்லது இருக்கின்றது இதோ: உன் வாயைத் திற. நான் சொல்கின்றேன். அது சரியாக—உன் குலுக்கத்தைக் குலுக்கிவிடும் இது [காலிபனுக்குச் சாராயம் கொடுக்கின்றான்] உன்னுடைய நண்பன் யாரென்று உன்னாற் சொல்லமுடியாது (37): உன் தாடையை மீண்டுந் திற.

(30) ட்ரின்குலோவிற்குப் பயந்து காலிபன் கதறுவது.

(31) மாட்டுத் தோலின்மீது மிதிக்கும் மன்னர்மன்னன் - செருப்பணிந்து நடக்கும் சக்கரவர்த்தி. அடைமொழிகள் பயனற்றன. இந்த விருபத்தைக் காணிக்கையாகக் கொண்டு கொடுத்தால் எந்தச் சக்கரவர்த்தியும் மகிழ்ந்து ஏற்றுக்கொள்வான்—என்பது பொருள்.

(32) காலிபன் கூவுவதன் பொருளை ஸ்ட்டிபானோ அறியான். குளிர்ச் சுரத்தால் இழுப்புக்கண்டு இவ்வாறு பிதற்றுகின்றானென்று எண்ணுகின்றான். அறிவிற்... பேசவில்லை - மடையனைப்போல் பொருளின்றிப் பிதற்றுகின்றான்—என்பது கருத்து.

(33) நெருங்கிச் செல்லும் - மிகவும் உதவும்.

(34) காலிபனை நோயினின்றுங் காப்பாற்றிப் பின் விற்றுவிடலாமென்று சிந்தித்துக்கொள்கின்றான் ஸ்ட்டிபானோ. அளவு கடந்தொன்றும் அதிகம் கொள்ளமாட்டேன்-என்பது இருபொருள்படும்:-(1) இவனை எவ்வளவு விலைவைத்து விற்றாலும் வாங்க வருவார்களாயினும் நான் நியாயமான விலையே கொள்வேன். (2) எவ்வளவு விலையும் இவனுக்குக் கொடுக்கத்தகுமாகையால் நான் என்னவிலை பெற்றாலும் அதனை அதிகம் என்று சொல்ல இயலாது.

(35) இவனை வாங்கி வைத்துக்கொள்ள விரும்புகிறவன் வேண்டிய விலை கொடுத்துத்தான் தீரவேண்டும்.

(36) இது, பயத்தாலும் குளிராலும் தன் பக்கத்திலே நடுங்குகின்ற ட்ரின்குலோவைக் குறித்துச் சொன்னது. அல்லது, குடிவெறியால் எதிரே நடுங்குகின்ற ஸ்ட்டிபானோவைக் குறித்துச் சொன்னதாகவும் இருக்கலாம். இருவரையும் ப்ராஸ்ப்பீரோவின் ஏவற் பேய்களேஎன்று காலிபன் கருதுவது இயற்கை.

(37) உனக்கு இப்படி உதவிசெய்ய வந்திருக்கின்ற நண்பனாகிய என்னை நீ யாரென்று அறியாய்.

தமிழ்ப் பாடம் 78.

அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை

[530-வது பக்கத் தொடர்ச்சி]

வடிவுபற்றியும் தொழில்பற்றியும் சிலேடைபற்றியும் வந்த உவமையணிகளைப் பெற்றுள்ள செய்யுள்கள்சிலவும், பிறிதுநவிற்சியணி பெற்றுள்ள செய்யுள் ஒன்றும் இதன்முன் வரலாயின. இனிஉயர்வுநவிற்சி அணிகள் அமைந்த சில செய்யுள்கள் வருகின்றன. கவி, தான் கூறவருகின்ற விஷயத்தினிடத்தில் உள்ள அபிமானத்தால் அதனை மிகுதியாகக் கூறுவது இவ்வணியின் இலக்கணம். அம் மிகுதியைக் காட்டுகின்றதற்குப் பற்பல யுக்திகளை மிகவும் அதிசயமாகக் கவிகள் உபயோகப்படுத்துவார். ஒன்றன் தன்மையை மிகவும் உயர்த்திச் சொல்வதால்இவ்வணிக்கு உயர்வு நவிற்சி அணி என்னும் பெயர் ஆயிற்று. அவ்வாறு உயர்த்திச் சொல்வதைக்கேட்டுச் சனங்கள் அதிசயப்படும்படியான யுக்திகளால் அவ்வணி அமைவதால்

வடமொழியில் அதனையே அதிசயோக்தி அலங்காரம் என்றழைப்பர். இவ்வணியின் தன்மையை முன் ஒரு சிறிது விளக்கியிருக்கின்றோம். உவமையணி தற்குறிப்பேற்றவணி போன்ற பிற அணிகளில் பல பிரிவுகள் இருப்பது போலவே இவ் வுயர்வுநவிற்சி யணியிலும் பல வகைகள் இருக்கின்றன. இப்படி வகைப்படுத்தியமைப்பதில் இலக்கண நூல்கள் சிறிது சிறிது வித்தியாசப்படும். அவைகளைப்பற்றி இங்கு நாம் பார்க்க வேண்டா. இந்த அணி தன்வரையில் அழகு தருவதோடு மற்ற அணிகளுக்கும் ஆதாரமாயிருந்து அழகினை மிகச் செய்வதால் எவ்வெவ்வகை யுக்திகளால் அவ் வதிசயம் தோன்றலாகின்றது என்பதை உய்த்துணர்ந்து கொண்டால் இவ்வணியின் சுவை பின்னும் நன்றாகத் தெரியவரும்.

அவ்வகை யுக்திகளில், தொடர்வுபடுத்துவ தொன்று. தான்கருதிய விஷயத்தின் மிகுதியைக்குறிப்பதன் பொருட்டு, எவ்விதத் தொடர்பும் இல்லாத இரண்டு பொருள்களுக்கு ஒரு தொடர்பு கற்பித்துக் கூறுவதால் தொடர்பு உயர்வுநவிற்சி தோன்றும். இவ்வாறு, பிள்ளைபெருமாள் ஐயங்கார் எடுத்துக்கொண்ட திருவேங்கடமலையின்பால் அவருக்கு உள்ள அன்பினால் மகிழ்ந்து அதன் உயரத்தை மிகைப்படுத்திக் கூறவருபவராய்த் தொடர்பில்லாத இரண்டு பொருள்களுக்குத் தொடர்பு கற்பிக்கும் யுக்தியால் அவ்வுயர்ச்சியை அதிசயப்படும்படி செய்யும் திறத்தைக் காட்டப் பல பல செய்யுள்கள் அமைத்திருக்கின்றார். அவைகளில் சிலவற்றைக் கற்போம்.

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும்வேங்கடமே-கூடத்துக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்
செம்பவள மாவென்றான் சேர்வு. [குஞ்

பதப்பிரிவு:—வாட பசித்த வரி உழுவை வால் ஆட்டி மேடத்தை பார்த்து உறுக்கும் வேங்கடமே கூடத்து கம்பம் வளம் மா வென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்கும் செம்பவளம் ஆ என்றான் சேர்வு.

பதவுரை:—வாட - வாட்டமடையும்படி, பசித்த - பசியடைந்திருக்கின்ற, வரி - கோடுகளமைந்த, உழுவை - புலியானது, மேடத்தை - மேஷராசியை, பார்த்து - பார்த்து, வால் - தன்னுடைய வாலை, ஆட்டி - ஆட்டி, உறுக்கும் - கோபிக்கும் இடமான, வேங்கடமே - வேங்கடமலைதான்,

கூடத்து - யானைச்சாலையில் இருந்த, வளம் - மதவளம் பொருந்திய, கம்பம் - எப்பொழுதும் அசைந்துகொண்டிருக்கும், மா - மிருகமாகிய குவலயாபீடம் என்னும் யானையை, வென்றான் - வென்றவனும், காசினிக்கும் - உலகங்களுக்கும், வெண்ணெய்க்கும் - வெண்ணெய்க்கும், (உண்பதற்கு ஆசைப்பட்டு) செம் - சிவந்த, பவளம் - பவளம்போன்ற தன் வாயை, ஆ என்றான் - ஆ என்று திறந்தவனுமாகிய திருமால், சேர்வு - சேர்ந்திருக்கும் இடம்.

விரிவுரை:—சூரியமண்டலத்தை விட உயர்ந்தது இராசி மண்டலம். நம்முடைய வானசாஸ்திரத்தின்படி, மேஷம் விருஷபம் மிதுனம் கடகம் சிம்மம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம் எனப் பன்னிரண்டு இராசிகள் இருக்கின்றன. ஒவ்வொரு இராசியும், சில நக்ஷத்திரங்கள் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கின்ற கூட்டம். இந்த இராசிகள் ஒவ்வொன்றும் சூரியன் சந்திரன் போல உதயமாவதும் உச்சிக்கு வருவதும் அஸ்தமிப்பதும் உண்டு. இந்த இராசிமண்டலங்களி னளவு உயர்ந்தது திருப்பதி மலை என்று கவிசொல்லிக்கொண்டுவருகின்றார். அது மிகை. எனினும், அதை நேராகச்சொல்லவில்லை. இம்மலையின்மேல் இருக்கின்ற ஒவ்வொரு பொருளோடு அந்த இராசிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சம்பந்தம் கற்பிக்கின்றார். திருப்பதிமலையில் வசிக்கும் புலிக்கும் மேடராசிக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை யென்பது தெரிந்திருக்கவும், அவை யிரண்டிற்கும் ஒரு சம்பந்தம்கற்பித்து, இப்புலி அந்த மேடராசியைப் பார்த்து வாலாட்டிக் கோபிக்கும் என்று ஒரு தொடர்பு காட்டியபடியால் இந்தச்செய்யுள் தொடர்பு உயர்வுநவிற்சி அணி ஆயிற்று. சமஸ்கிருத பதம் 'மேஷம்' என்பது. தமிழில் "மேடம்" என வழங்கும். மேஷம் என்பது ஆடு என்னும் மிருகத்தின் பெயர். மேஷராசி பார்ப்பதற்கு ஆட்டைப்போல் இருக்கும் என்றுகூடச் சொல்வதற்கில்லை. சொல்லளவிலே மேஷம் என்பது ஆடு எனப் பொருள்படுவதால், அதையே நிபமாகக் கொண்டு பசித்திருந்த இப்புலி கோபிப்பதாயிற்று. காஞ்சீபுரமென்னும் ஊரைச்சேர்ந்த வரதப்பன் என்னும் ஒருவன் தெருவே போக, அவனை இன்னொருவன், 'கஞ்சி வரதப்பா' என்று கூப்பிட்டபோது, பசியால் வாடியிருந்த ஒருவன் ஆவலோடு, 'எங்கே வரது அப்பா" (எங்கே கஞ்சி வருகின்றது) என்று கேட்டான் என்னும் விகடக்கதை கேட்டிருப்பீர். பசித்திருந்த புலியின் நிலையும் 'மேஷம்' மலையுச்சி வந்தபோது அவ்வாறுயிற்று.

குறிப்பு:—யானைகட்டு மிடத்தைக் கூடம் என்று அழைப்பர். பூகம்பம், சிரக்கம்பம், என்று வழங்கும் வழக்குக்களைப்போல், கம்பம் என்ற வடமொழிக்கு 'அசைதல்' என்பது அர்த்தம். யானை எப்பொழுதும் அசைந்துகொண்டே இருக்கும் காரணம்பற்றி அதற்குக் 'கம்ப மா' என்ற பெயருண்டு. அசைகின்ற மிருகம் என்பது அதன் அர்த்தம்.

பவளம் என்ற சொல், அதன் பொருளாகிய பவளத்தை இங்குக் குறிக்காமல் வாய் என்னும் இன்னொரு பொருளுக்கு ஆனமையால் அது இங்கு ஆகுபெயர். பவளம்போன்று இருக்கும் சம்பந்தம்பற்றி வாயைப் பவளமென்றே கூறியதால் அது உவமை ஆகுபெயர்.

ஒண்சிந்து ரத்தைவெறுத் தூடும் பிடிவேழம்
விண்சிங்கங் கண்டணைக்கும் வேங்கடமே-யெண்சிந்
தோரா விருந்தா னொருநாள் விதுரனுக்கு [தைக்
வாரா விருந்தான் வரை. 7.

பதப்பிரிவு:—ஒண் சிந்துரத்தை வெறுத்து ஊடும் பிடி வேழம் விண் சிங்கம் கண்டு அணைக்கும் வேங்கடமே எண் சிந்தைக்கு ஓரா இருந்தான் ஒரு நாள் விதுரனுக்கு வாரா விருந்தான் வரை.

பதவுரை:—ஒண் - ஒளிபொருந்திய, சிந்துரத்தை - குங்குமத்தை, வெறுத்து - வெறுத்து, ஊடும் - ஊடுகின்ற, பிடிவேழம் - பெண்யானையானது, விண் - ஆகாயத்தில்எழும், சிம்மம் - சிம்மராசியை, கண்டு - பார்த்து, அணைக்கும் - ஆண்யானையை அணைத்துக்கொள்வதற்கு இடமாயிருக்கின்ற, வேங்கடமே - வேங்கடந்தான்,

எண் - எண்ணுகின்ற, சிந்தைக்கு - மனத்திற்கு, ஓரா - அறியப்படாமல், இருந்தான் - இருந்தவனும்,

விதுரனுக்கு - விதுரனுக்கு, ஒருநாள் - ஒரு காலத்தில், வாரா - வருதற்கு அருமையான, விருந்தான் - விருந்தாக வந்தவனுமாகிய திருமால் விரும்பியிருக்கும், வரை - மலையாகும்.

விரிவுரை:—ஆகாயத்தில் உள்ள சிம்மராசிக்கும், திருவேங்கடமலையில்உள்ள பெண்யானை கொண்ட ஊடல் தீர்வதற்கும் ஒரு சம்பந்தம் கற்பித்து, அதன் மூலமாய் அம்மலை மிகவும் உயர்ந்ததென்று புகழ்கின்ற அதிசயம் அடங்கியிருப்பதால் இச்செய்யுளில் உள்ள அணியும் தொடர்பு உயர்வு நவிற்சி அணியாம். நாயகி தன் நாயகன்மேல் தான் வைத்திருக்கும் அளவு ஆசை அவனுந் தன்மேல் வைத்திராமல் பிற மாதரை விரும்பியுள்ளான் என்று அறிந்துகொள்வதற்குக் காரணம் ஏதோ கண்டுவிட்டதாகக் கற்பித்து அவனோடு கோபங்கொண்டு சிறிது விலகி நடிக்கின்ற நிலை ஊடல் எனப்படும். இதனை முன் நளவெண்பாப் பாடத்தில் எடுத்து உரைத்திருக்கின்றோம் (வால்யூம் 5. பக்கம் 564). இப்படி ஊடல் கொண்டவளது கோபத்தை நாயகன் பலவாறு தணிக்க முயல்வான். கோபித்திருப்பவள் நெற்றியில் விளையாட்டாகத் திலகம் இடுவதும், அவளுக்குப் பூமாலைகள் சென்றுசூட்டுவதும் செய்துபார்ப்பான். அவளோ வெஞ்சினம் மேன்மேலும் மூண்டெழுந்தவள்போல் இட்ட திலகத்தை அழித்துவிடுவதும், சூட்டிய மாலையைப் பிய்த்தெறிவதுமாக இருப்பாள். இந்நிலையில் சில நாயகன்மார் நளனைப்போல் அவள் காலில் விழுந்துவிடுவார். அப்படி விழுந்தும் ஊடல் தீராத மாதரும் இலக்கணையைப்போல் (வால்யூம் 1. பக்கம் 95) சிலர் இருக்கலாம். எனவே, "என் செயலால் ஆவது இனி யாதொன்றுமில்லை" என்று ஏங்கியவண்ணம் நாயகன் ஒரு புறமாகவும், தொண்டைக்கனி வாய் துடிப்ப நாயகி மற்றோர் புறமாகவும் தனித்திருப்பச் சிறிதுநேரம் சென்றபின் அந் நாயகியின் நெஞ்சினில் இருந்த கோபம் தேய்ந்துதேய்ந்து மறுபடி நாயகனை அணைய வேண்டும் என்னும் ஆசையே மேன்மேலும் வளரும். ஆனால் அவன் தன் காலைப்பிடித்தபோதெல்லாம் கருவித்திரிந்துவிட்டு இப்பொழுது எப்படிச்சென்று அவனுடன் கூடிக்கொள்வதெனும் நாணத்தால் நைபவளாவாள். உள்ளத்திலிருந்த ஊடலெல்லாந் தீர்ந்ததாயினும் இனிச்சென்று அவனோடு கூடுவதற்குக் காரணம் கற்பித்துக்கொள்ளவேண்டியது அவளுக்கு அவசியமாகின்றது. ஏதேனும் ஒன்றிற்குப் பயந்தவள்போல் பாவித்து அவனை அணைத்துக்கொள்வது மிகவும் சுலபமானஉபாயம். "காகம் 'கா' என்று கத்தியதாம், அகமுடையானைப்போய் அப்பாடா என்று கட்டிக்கொண்டாளாம்," என வழங்கும் வாசகம் இதுபற்றியே எழுந்தது யிருப்பினும் இருக்கலாம். அந்த உபாயந்தான் இந்த யானை இங்குச்செய்தது. பெண்யானை தன் களிற்றுடன் ஊடல்கொள்ளவும் அவ்வூடலைத் தணிக்க ஆண்யானை இட்ட சிந்துரத்தையெல்லாம் பெண்யானை வெறுத்துவிட்டு விலகிவிட, பிறகு கோபம் நீங்கியபின் மறுபடி அணைவதற்கு நாணி இருக்கவே, ஆகாயத்தில் சிம்மராசி வர, சிம்மம் என்ற சொல்லளவில் 'இதுதான்சாக்கு' என்று பயங்கொண்டதுபோல் பாசாங்குசெய்து போய் அணைத்துக் கொண்டது.

குறிப்பு:—வாராத, என் றிருக்கவேண்டியது வாரா என்றிருப்பதால் இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

இலக்கணம்

இரண்டு வார்த்தைகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து வரும்போது அவை அர்த்தத்தால் எவ்வாறு சேருகின்றன என்பதை முன் தொடரிலக்கணத்தில் பார்த்தோம். இவ்வாறு தொடர்கின்ற மொழிகளில் முதலில் இருக்கும் மொழியை நிலைமொழி யென்றும், பின்வருகின்ற மொழியை வருமொழி யென்றும், அழைப்பர். சொற்கள் தொடரும்போது நிலைமொழியின் இறுதியில் உள்ள எழுத்தும், வருமொழி முதலில் உள்ள எழுத்தும் சேர்ந்து உச்சரிக்கின்ற ஒலியில் சில வேறுபாடுகள் உண்டாகலாம். அதாவது, நிலைமொழி யிறுதியிலேனும் வருமொழி முதலிலேனும் அல்லது இரண்டு இடத்திலுமேனும் உள்ள எழுத்துக்கள் சில மாறுபாடுகள் அடைவதுங்கூடும்; ஒன்றும் அடையாமல் இருக்கின்றபடியே இருந்தாலும் இருக்கலாம். (நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் உள்ள எழுத்துக்கள் தவிர மற்ற எழுத்துக்களில் ஒன்றும் வேறுபாடு அடையவே அடையாது என்று எண்ணப்படாது. சிற்சில சமயம் மற்றுஞ் சில எழுத்துக்களும் வேறுபடலாம். இதைப்பற்றிப் பின்னர்ப் பார்ப்போம்)

18152

இவ்வாறு இரண்டு பதங்கள் தொடரும்போது அவைகளிலுள்ள எழுத்துக்கள் என்ன ஆகும் என்பதைப் பற்றிச் சொல்கின்ற இலக்கணம் புணரிலக்கணம். வார்த்தைகள் அர்த்தத்தால் சேர்வது தொடரிலக்கணம்; அவை சப்தத்தால் சேர்வது புணரிலக்கணம். ஆனால், சப்தத்தால் அவை சேர்ந்து ஒலிக்கின்ற தன்மை, பெரும்பான்மை அவ் வார்த்தைகள் எவ்வித அர்த்தத்தால் தொடர்கின்றன என்பதை ஒட்டி இருக்கின்றது. ஒலிக்கின்ற ஒலியினுடைய குறிகள் தாம் எழுத்துக்கள் ஆம் என்பதை மறவாதிருந்தால், தொடர்கின்ற சொற்கள் அடைகின்ற சப்த வேறுபாட்டிற்கு ஏற்றபடி எழுத்துக்களும் வேறுபாடு அடையும் என்பதுதெரியலாகும். இவ் வேறுபாட்டை இலக்கணங்களில் விகாரம் என்று அழைப்பர்.

பதப்புணர்ச்சிக்கு உரிய விகாரங்கள், தோன்றல் திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும். வாட, பசித்த என இரண்டு சொற்களைத் தொடர்ந்து உச்சரிக்கும்போது 'வாடப்பசித்த' என வருமொழி முதலில் ப் என்ற ஒரு எழுத்துத் தோன்றியது. அப்படியே 'மேடத்தைப் பார்த்து' என்னும்போது ப் என்ற எழுத்துத் தோன்றியது "கூடத்துக் கம்ப..." என்னும்போது "கூடம் + அத்து + க் + கம்ப......" என, அத்து என்னும் ஒரு சாரியையும், க் என்ற ஒரு எழுத்தும் தோன்றின, (கூடம் + அத்து, கூடத்து என்று எப்படியாயிற் றென்பதைப் பின்னர்ப் பார்ப்போம்). இவ்விதம் இரண்டு பதங்கள் புணரும்போது, ஒரு எழுத்தேனும், சாரியையேனும் அவ்விருசொற்களின் ஒலியைக் கூட்டிவைப்பதற்கு உதவியாய்த் தோன்றுமாயின், அவ்விகாரம் தோன்றல் விகாரம்.

திரிதல் என்பது, இரண்டு பதங்கள் புணரும்போது ஒரு எழுத்து வேறு ஒரு எழுத்தாய் மாறிவிடுவ

தாகும். கல்+சட்டி, என்னும் இவ்விரண்டு சொற்களும் சேரும்போது கற் சட்டி' என்றாகும். நிலைமொழி இறுதியிலிருந்த ல் என்னும் எழுத்து, ற் என்று மாறியது. அப்படியே, முள்+செடி, முட்செடி என, ள் என்னும் எழுத்து ட் என்னும் எழுத்தாகத் திரிந்தது. இத்தகைய விகாரம் திரிதல்விகாரம். வெண்ணெய்க்கும்+செம்.........' என்று தொடரில் ம் என்னும் எழுத்து ஞ் என்னும் எழுத்தாகத் திரிந்து இருக்கின்றது.

பதங்கள் புணரும்போது சிலஎழுத்து, இல்லாமலே மறைந்து போய்விடுமானால், அது கெடுதல் விகாரம். மரம்+வேர், என்று சேரும்போது, நிலைமொழி இறுதியிலுள்ள ம் என்னும் எழுத்துக் கெட்டு 'மரவேர்' என்று நிற்கும். கம்பம்+வள...' என்றது 'கம்பவள' என்றானதும் ம் கெட்டதால்தான்.

கலித்தொகை

[523-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 17.

'பொருள் தேடப் போகின்றேன்' என்று தலைவன் கூறக்கேட்ட தோழி, அவனுக்கும் தலைவிக்கும் முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறியும், இல் வாழ்க்கையின் இலக்கணத்தை உணர்த்தியும் அவன் செலவைத் தடுத்ததைக் கூறுவது இச்செய்யுள்.

—

அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப்
பிரிந்துறை சூழாதி யைய! விரும்பிநீ
யென்றோ ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணுதுஞ் செல்லா
ரிளமையுங் காமமு மோராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ வுளநா
ளொரோஒகை தம்முட் டழீஇ யொரோஒகை
யொன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினு
மொன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற இளமை தாற்கு.

(வரி. 1 - 12) அரும் பொருள் வேட்கையின் - அருமையாகிய பொருளிடத்துள்ள (உனது) ஆசையால், உள்ளம் துரப்ப - (உனது) ஊக்கம் செலுத்த, பிரிந்து உறை சூழாதி - (நீ தலைவியைப்) பிரிந்து போய் (வேறு நாட்டில்) தங்குதலை நினையாதே, ஐய - ஐயனே! விரும்பி நீ என் தோள் எழுதிய - மகிழ்ந்து நீ தலைவியின் தோள்களின்மேல் எழுதிய, தொய்யிலும் - கோலத்தையும், நின் மைந்து உடை மார்பின் - உனது வலிமையுள்ள மார்பினை (நினைப்பதால் அவளுக்கு உண்டாகும்), சுணங்கும் - சுணங்கையும், நினைத்துக்காண் - நினைத்துப் பார்! சென்றோர் முகப்ப - பொருளின்பொருட்டுப் போனவர் முகந்து கொண்டுவர, பொருளும் கிடவாது - செல்வமும் (ஓரிடத்தே குவிந்து) கிடவாது, ஒழிந்தவர் எல்லாரும் - (பொருள் தேடப் போகாதவராகிய) பிறர் எல்லாரும், உண்ணுதும் செல்லார் - உண்ணுமலும் போகார், இளமையும் காமமும் - இளமையையும் காதலையும், ஓராங்கு பெற்றார் - (தம்முள்) ஒரே அளவாகப் பெற்ற தலைவன் தலைவியர், வளமை விழைதக்கது உண்டோ - செல்வத்தை விரும்பத்தக்கதொரு பொருளாகக் கொள்ளுதல் உண்டோ? உள நாள் - (தமக்கு வாழ் நாளாக) உள்ள காலம் எல்லாம், ஒரோஒகை - (தம்) ஒரு கையாலே, தம்முள் தழீஇ - ஒருவர் ஒருவரைத் தழுவிக் கொண்டு, ஒரோஒ கை - (தம்) மற்றொரு கையை, ஒன்றன் கூறு ஆடை - (தம்) ஒரு பக்கத்து ஆடையாக, உடுப்பவரே ஆயினும் - உடுக்கும் வறியரேயானாலும், ஒன்றினார் வாழ்க்கையே - (பிரியாது எந்நாளும்) கூடி இருக்கும் தலைவன் தலைவியரது வாழ்க்கைதான், வாழ்க்கை- வாழ்க்கை என்று சொல்லப்படும், சென்ற இளமை தாற்கு அரிது - (பிரிவினால்) கழிந்த இளமை (மீண்டும்) கொடுத்தற்கு இயலாது.

தனக்கும் தலைவிக்கும் மனத்தால் வேற்றுமை இன்மையால் தலைவியின் தோளைத் தோழி தன் தோளாகக் கூறினள். இஃது அகப்பொருள்பற்றி வரும் வழுவமைதியின் ஒன்று.

சந்தனம், குங்குமம், கற்பூரம் முதலியவற்றைக் குழைத்து மகளிர் தோள்களிற் கரும்பு போலவும், மார்பிற் காமவல்லி போலவும், எழுதுகோலால் தலைவர் எழுதும் கோலம் தொய்யிலாகும்.

சுணங்கு என்பது இளமகளிர்க்குக் காமத்தால் உடம்பின் சிற்சில இடங்களில் தோன்றும் நிற வேறுபாடு; அது மாந்தளிர் போன்ற அவர் மேனியில், அரத்தால் அராவிய பொன்னின் பொடி தூவியதுபோலக் கிடக்கும்.

ஒரோஒ கை ஒன்றன் கூறு ஆடை உடுத்தலாவது:— தாம் உடுத்த ஆடையின் துண்டு தம் அரையை முற்றும் மூடாமையின், மூடாத இடத்தைத் தம் கை ஒன்றாற் பொத்துதல். 'நுண்ணூச் சிறு கூறை பாகம் ஓர்கை பாகம் உடுத்து' என்றார் சிந்தாமணியிலும். (2625)

'பொருளும்' என்ற இடத்து எதிரது தழீஇய எச்ச உம்மையும், 'உண்ணுதும்' என்ற இடத்து இறந்தது தழீஇய எச்ச உம்மையும் வந்தன. உண்டோ - ஓகாரம் எதிர்மறை. யாழ, அரோ - அசைகள்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[508-வது பக்கத் தொடர்ச்சி]

XI. அப்பரும் சொல்லதிகாரமும்

(b) அப்பரும் நால்வகைச் சொற்களும்

(i) சொல்லாவது யாது?

சொல்லப்படுவது சொல் என்பர் சிலர். ஏனெனின், அசைச் சொல்லும் இவ்விதியில் அடங்கும். ஆயினும் தொல்காப்பியனார் கிளவியாக்க முதல் சூத்திரத்தில்,

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே"

என, சொல்லின் பயனால் (by dynamic Conception) அதன் இலக்கணத்தைக் கூறினார். உயர்திணைப் பொருள்கள் அஃறிணைப்பொருள்கள் என்னும் இரு வகைப் பகுதியையும் அவற்றின் இயக்கத்தையும்

காட்டுவன சொல் எனப்படும் என்றார். இக்கருத்தைத் திருநாவுக்கரசு

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை அரியான் றன்னை
அடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பியேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

திருநாரையூர் - திருத்தாண்டகம் 1.

என்னும் பாசுரத்தில் விளக்குவது காண்க. மற்றும் தொல்காப்பியனாரும், பெயரியற் சூத்திரங்களின் முதலாய் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பதை வைத்தனர். இதற்குப் பின்னர், அடைச் சொற்களையும், இடைச்சொற்களையும் சொற்கள் பகுதியினின்று நீக்காவண்ணம்,

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலுஞ்
சொல்லி னாகு மென்மனார் புலவர்

எனச் சுருதிகூறி, பொருண்மை தெரிவதற்குப் பயன்படாதசொற்கள் சொன்மைதெரியப் பயன்படுவதால், அவைகளும் சொற்பகுதியி லடங்குமென்றும். சில சொற்கள் ஏனைய சொற்களைப் *பரவச் செய்தலால் பொருள் திருந்தும். அவைகள் தமக்கெனப் பொருளில்லா விடத்தும் ஏனைய சொற்களின் பொருளைத் தெரிவிக்கப்பயன்படும். அத்தொழில் "பாவுதல்" என உலகவழக்கில் துணிநெய்யும் உருவகத்தில்உணர்த்தப் படுவதுண்டு. அக்கருத்தைக் கீழ்வரும் தேவார பாசுரத்திலு முணரலாம்:—

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை
நற்பான்மை யறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி னானைப்
பற்பாவும் வாயாரப் பாடி யாடிப் [போக்க
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம்
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே.

திருக் கீழ்வேளூர் - திருத்தாண்டகம்

இவ்வாறு தொல்காப்பியனாரும், அம் முறைபற்றிய நமது சமயகுரவரும், சொல்லின் இலக்கணத்தைப் பயனின் நோக்கத்தால் (Dynamic Conception) விளக்கியிருக்கப் பவணந்தி முனிவர் சொல்லின் ஸ்தூல லட்சணமே (Static Quality) இலக்கணமாகக் கைக்கொண்டாரென்பது நன்னூலில் நன்கு விளங்குகின்றது.

பதம், மொழி (கிளவி), சொல் என்னும் மூன்றும் ஒரே பொருளைக் குறித்த சொற்களென எண்ணப்படினும், நமது தமிழ் இலக்கணங்களில், அவற்றின் பிரயோகம் வேறு வேறாகக் காணப்படுகின்றது. தொல்காப்பியனார் இருதிணையில் இயங்குவன சொல்லாம் என்றவாறு, பவணந்தி சொல் என்பது யாதெனச் சூத்திரங் கூறாமல்,

"ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே"

(நன்னூல் - சொல்லதிகாரம் - 2)

என்றார்.

மனிதனுடைய இலக்கணம் யாதென ஆராய்வோர்க்கு, அவன், இரண்டு கால், இரண்டு கை, இரண்டு கண், இரண்டு காது முதலிய அவயங்கள் உடையவனுய் மற்ற ஜீவர்களைத் துன்புறுத்தும் சக்திவாய்ந்தவனென்பது போலாம் இது. இச்சூத்திரத்திற்குச் சங்கர நமச்சிவாயர் சொல்லின் பொதுவிலக்கணமெனத் தலைப்புக்கொடுத்தார். பொதுவகையிலும் சொல்லின் இலக்கணத்தை இது காட்டவில்லை, சிறப்புவகையிலும் இது காட்டவில்லை. சொல்லின் வகைகளையும், அவை விரித்துக் காட்டுவன சிலவற்றையும், இச்சூத்திரம் காட்டாநிற்கும். பவணந்தியார் சொல்லதிகாரத்தில் 275-ம் சூத்திரத்தில் பெயர்ச்சொல் என்பது.

"இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்ற
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே"

என்றார்.

இவ்வகை இலக்கணங் கூறல் மாணவர்களுக்குப் பெரிய ஆராய்ச்சிக்குத் தொழில்படுப்பதன்றி, பகுத்தறிந்து எளிதில் பெயர்ச்சொல் இதுவென வறிய வழிகாட்டுவதன்று. தொல்காப்பியனார் பழையவரெனக் கழித்துத்தான் நூதனமாய்ப் பவணந்தி செய்த சூத்திரங்கள் யாவும் இவ்வாறே மாணவர்களுக்குப் பயன்தாராதனவாய் நிற்கின்றன. தொல்காப்பியனார் கிளவியாக்கத்தில் "........ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே" என்ற கொள்கைக்கு முற்றும் பொருத்தமாய்ப் பின்னியல்களிலும் சொற்களின் இலக்கணங்கள் கூறுகின்றார். பெயர்ச்சொலின் இலக்கணங் காட்டுமிடத்து

"பெயரெனப் படுபவை தெரியுங் காலை
யுயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே" என்றார்.

(தொல் - பெயரியல் - 6)

மற்றும் பொதுவகை காட்ட

"இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கு
முரியவை யுரிய பெயர்வயி னான"

என்று பெயர்ச்சொல் லிலக்கணத்தைத் தொகுத்துச் சுட்டி, அவ்வழி கொள்ளப்படுவன யாவையெனப் பின்வரும் சூத்திரங்களில் வகுத்துக் காட்டினார். இருதிணைச்சொற்களும், ஐந்திணை மருங்கின் வழங்கப்பட்டு வருவதால் கருப்பொரு ளுணர்த்தும் விரவுப் பெயரின் தன்மையைக் காட்டப் பெயரியல் முடிவில்,

"திணையொடு பழகிய பெயரலங் கடையே"

என்றார். (தொல் - சொல். 197)

* பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகை கொண்ட
போரானைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.

திருப்புள்ளிருக்கும் வேளூர்-திருத்தாண்டகம்-8.

இவ்வாறு இருதிணையும் ஐந்துபால்களும் விரவும் பொருள் பெயராயினும், நம் பிறவி "பேசப் பொருளிலாதது" எனத் திருநாவுக்கரசு

பேசப் பொருளிலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறுமனத்தால் வேண்டி யீண்டு
வாசக் குழல்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் தூநீ றாடித்
துதைந்திலங்கு நூல்மார்பன் தொடர கில்லா
நீசர்க் கரியவன் நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 7.

என இகழ்ந்து, இருதிணையும் ஐந்துபால்களுமாய்க் காணப்படுவன பாசரூபமான மாயை யாதலாலும், அதற்கு, தனக்கென்னும் ஸ்திரமான நிலையின்றி நாம ரூபமாய் முடியுமாதலானும், பேசப் பொருளன்று, அதற்குச் சொல்லுமில்லை யென்பர். இதற்கு எதிர் மறையாய் நிற்கும் பரம்பொருளோ, சொல்லார்ந்தது என்பர்:—

சொல்லார்ந்த சோற்றுத் துறையான் றன்னைத்
தொல்நரகம் நன்னெறியால் தூர்ப்பான் றன்னை
வில்லானை மீயச்சூர் மேவி னானை
வேதியர்கள் நால்வர்க்கும் வேதஞ் சொல்லிப்
பொல்லாதார் தம்மரண மூன்றும் பொன்றப்
பொறியரவம் மார்பாரப் பூண்டான் றன்னைக்
கல்லாலின் கீழானைக் கழிசூழ் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே.

திருநாகைக் காரோணம் - திருத்தாண்டகம் 9.

மேற் கூறியவாற்றால் சொல்லெனக் கூறத் தக்கவை பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமேயாம். இடைச் சொற்களும், *உரிச் சொற்களும் பெயரையும் வினையையுஞ் சார்ந்து தோன்றுமாதலால், அவை சிறப்பு வகையில் சொல்லாகா:—

"சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே"
"இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப"

(தொல் - பெயரியல் - 4 - 5)

இடைச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் உள்ள சம்பந்தத்தின் உருவகத்தை, பின்வரும் அப்பர் பாசுரத்தா லுணரலாகும்:—

இடைவித்த வாறிட்ட நோய்வினை
காட்டி யிடர்ப்படுத்து
உடைவித்த வாறுற்ற நோய்வினை
தீர்ப்பா னுகந்தருளி
அடைவித்த வாறடி யேனையை
யாற னடிமைக்களே
தொடர்வித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே.

திருவையாறு - திருவிருத்தம் - 6.

இடைச்சொல்லின் இலக்கணம் இதுவென யெடுத்துக் காட்டாமல் பவணந்தி முனிவர் இடைச்சொற்களின் பல்வகைத் தோற்றங்களைப் பின்வரும் அவர் இடையியற் சூத்திரத்தில் காட்டுகின்றார். அவையாவன:—

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்

நன்னூல் - 420.

இதைச் சங்கர நமச்சிவாயர் இடைச் சொல்லின் பொதுவிலக்கண மென்பார். இலக்கண மென்பதில் சிறப்பிலக்கணமே மாணவர்களுக்கு இத்துறையில் பயன்படுவதாகும். அது கூறாது, நிறுத்த முறையான் இத்துணைக் கூறினும் பயனின்றாம்.

* "இடையெனப் படுவ பெயரொடும் வினையொடு
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே"
[தொல்-249]

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[528-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 5-ம் தசகம்

1-ம் பாசுரம்.

எங்ஙனேயோ வன்னைமீர்கா
ளென்னை முனிவதுநீர்
நங்கள்கோலத் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
சங்கினோடும் நேமியோடுந்
தாமரைக் கண்களோடும்
செங்கனிவா யொன்றினோடுஞ்
செல்கின்றதென் னெஞ்சமே.

பொழிப்புரை:-தாய்மார்களே, என் நிலைமை தெரிந்திருந்தும் என்னை நீங்கள் கோபிப்பது எப்படி நியாயமாகும். நம் அழகிய திருக்குறுங்குடியில் கோயில் கொண்டிருக்கின்ற குணத்தால் சிலாக்கியமான பெருமானை நான் கண்ணுற்றபிறகு, என் நெஞ்சம், அவன் சங்கோடும் சக்கரத்தோடும் தாமரைபோன்ற கண்களோடும் ஒப்பற்ற சிவந்த கனிபோன்ற அவன் இதழினோடும் செல்கின்றதே—நான் என்னசெய்வேன்.

2-ம் பாசுரம்.

என்னெஞ்சினால் நோக்கிக்காணீ
ரென்னை முனியாதே
தென்னஞ்சோலைத் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
மின்னுநூலுங் குண்டலமும்
மார்வில் திருமறுவும்
மன்னுபூணும் நான்குதோளும்
வந்தெங்கும் நின்றிடுமே.

பொழிப்புரை:—தென்னைமர மடர்ந்த சோலைசூழ்ந்த திருக்குறுங்குடியில் கோவில்கொண்ட நம்பியை நான் பார்த்தபிறகு, அவனது பிரகாசிக்கின்ற பூணூலும் குண்டலமும் மார்பில் உள்ள அழகிய மறுவும் கவுஸ்துப இரத்தினமும் நான்கு தோள்களும், வந்து எங்கும் என் கண்களுக்கு முன்னே நிற்கின்றனவே. அன்னைமீர், இது எப்படி நேரும் என்று என்னைக்கோபிக்காதீர்கள், என்னுடைய மனத்தினால் நீங்கள் பார்ப்பீர்களானால் உங்களுக்குந் தோன்றும்.

குறிப்பு:—பகவத் விச்லேஷத்தில் அகப்பட்டு இரவில் தாம் மிகத்துயரடைந்தாரென்று முன் தசகத்தில் பாடிய ஆழ்வார், இத் தசகத்தில், திருக்குறுங் குடியிலுள்ள நம்பியின் ஸௌந்தரியத்தை வர்ணித்துத் தாம் மானஸாநுபவம் செய்ததாக அன்னைமார்களுக்குக் கூறுவது எப்படிப் பொருந்து மென்றால்—இரவு விடியவே, துயரம் ஒருசிறிது நீங்கி நம்பியின் திவ்விய அழகில் உள்ளம் ஈடுபட்டு நிற்கின்ற இப்பிராட்டி, தன்முன் வரும் தாய்மார் தோழியர் உலகத்தவர் முதலியோரை நோக்கித் தம்முடைய அனுபவத்தைச் சொல்ல, அவர்கள், "நாங்கள் நம்பியின் வடிவழகைக் கண்டதில்லையே. நீ மாத்திரம் அதனைக் குறித்து ஓயாமல் சிந்திக்கவும் பேசவும் நேர்வது என்ன" என்று கடிந்துபேச, அதற்கு இப் பிராட்டி, "நீங்களும் என்போன்ற பக்தியுடைய உள்ளத்தோடும் பார்ப்பீர்களானால், உங்கள் கண்களுக்கும் புலப்படும்," என்கின்றாள்.

3-ம் பாசுரம்.

நின்றிடுந் திசைக்குநையு
மென்றன்னையரு முனிதிர்
குன்றமாடந் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
வென்றிவில்லுந் தண்டும்வாளுஞ்
சக்கரமுஞ் சங்கமும்
நின்றுதோன்றிக் கண்ணுள்நீங்கா
நெஞ்சுள்ளும் நீங்காவே.

பொழிப்புரை:—ஒன்றுஞ் செய்யாமல் சக்தியற்று நிற்கின்றேன் என்றும், ஒன்றுந் தெரிந்துகொள்ள மாட்டாமல் திகைக்கின்றேன் என்றும், ஒரு காரணமும் இல்லாமல் தளர்கின்றேன் என்றும், என் தாய்மார்களாகிய நீங்களுமேகோபிக்கின்றீர்—நான் என்ன செய்வேன், குன்றுபோன்ற மாளிகைகளையுடைய திருக்குறுங்குடியில் கோவில்கொண்டருளியிருக்கும் நம்பியை நான் கண்டபின், அவனுடைய வெற்றிவாய்ந்த வில்லும் கதையும் வாளும் சக்கரமும் சங்கமும் இடைவிடாது தோன்றி என்கண்ணிலும் நெஞ்சிலும் நீங்காமல் நிற்கின்றனவே.

4-ம் பாசுரம்.

நீங்கநில்லாக் கண்ணநீர்க
ளென்றன்னையரு முனிதிர்
தேன்கொள்சோலைத் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
பூந்தண்மாலைத் தண்டுழாயும்
பொன்முடியும் வடிவும்
பாங்குதோன்றும் பட்டும்நாணும்
பாவியேன் பக்கத்தவே.

பதக் குறிப்புக்கள்:—பாங்குதோன்றும் - வடிவிற்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றி விளங்குகின்ற, நாண்-அரைஞாண், பாவியேன் பக்கத்தவே-இவை என் பக்கத்திலே கையால் தீண்டி அனுபவிக்கக் கூடியன போல் அருகு தோன்றுகின்றன. ஆயினும் அதற்குப் பாக்கியம் இல்லாத நான் பாவம் பண்ணினவள் அல்லளோ. கண்ணில்.........முனிதிர் - நம்பியைப் பிரிந்து தரிக்கமாட்டாதவள் நான் என்பது அறிந்தும், "கண்களில் வற்றாத நீர் உடையவள்" என்று என்னை அன்னைமீர் கடிகின்றீர்களே.

5-ம் பாசுரம்.

பக்கநோக்கி நிற்குநையுமென்
றன்னையரு முனிதிர்
தக்ககீர்த்தித் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
தொக்கசோதித் தொண்டைவாயும்
நீண்டபுரு வங்களும்
தக்கதாமரைக் கண்ணும்பாவியே
னாவியின்மே லானவே.

பதக்குறிப்பு:—பக்க நோக்கி.........முனிதிர் - என் பக்கத்தில் ஒருவரும் இல்லாதிருக்க யாரோ இருப்பதுபோல் நான் அடிக்கடி பார்த்து நிற்கின்றேனென்றும், தளர்கின்றேன் என்றும், அன்னைமார்களாகிய நீங்களும் கோபிக்கின்றீர்களே, பாவியேன் ஆவியின் மேல் ஆனவே - கொவ்வைக்கனி போன்ற வாய் முதலியன பாவியான எனது உயிர்நிலையையே பற்றிக் கொண்டுவிட்டனவே.

6-ம் பாசுரம்

மேலும்வன்பழி நங்குடிக்கிவ
ளென்றன்னை காணக்கொடாள்
சோலைசூழ்தண் திருக்குறுங்குடி
நம்பியைநான் கண்டபின்
கோலநீள்கொடி மூக்கும்தாமரைக்
கண்ணுங் கனிவாயும்
நீலமேனியு நான்குதோளு
மென்னெஞ்ச நிறைந்தனவே.

பதக்குறிப்பு :—முதலடி - இவள் இவ்வாறு ஒரு நம்பியின்பால் வைத்த ஆசை நிறைவேறாமல் ஊரார் சிரிக்க நம் குலத்திற்கு இவள் பழி ஆயினளென்று என்னைக் காணவும் அன்னை பொறுக்க மாட்டாதவள் ஆனாள்.

அமீல்

"Our span of life is short and opportunities are rare, so let us sow our seeds of thought where the soul claims them and where the harvest will ripen."

"Life cannot exist without devotion to an ideal, which one must have conceived for oneself. For life is a struggle for an object. But this implies devotion to a cause, giving oneself up completely to something."

"A man is what he loves."

"If thine eye be single, thy whole body shall be full of light."

"The spirit of man is the candle of the Lord."

"Life is a fountain of everlasting exhilaration."

தோற்றுவாய்:—சாகரத்தைவிட அதிக அற்புதமா னகாட்சி ஒன்றுளது. அதுதான் வானம்; வானத்தை விட மிக்க விசித்திரம் வாய்ந்தது ஒன்றுளது, அது தான் மனிதனது உள்ளம். ஏனெனில் பார்த்தற்கும் நினைத்தற்கும் அளத்தற்கும் இயலாமல் நின்று வித்த கர் எவரையும் எக்காலத்திலும் பிரமிக்கச் செய்வது மனிதர் உள்ளம். பூமியைத் தோண்டித் தோண்டி உள் ளே உள்ளவைகளைச் சோதித்துப் பார்க்கலாம்; விண் ணிற் கப்பாலுள்ள இரகசியங்களைப் புறக்கருவிகளைக் கொண்டு அறியலாம்; எனினும், மனிதரது உள்ளத் தின் பான்மையையும் போக்கையும் தெளிந்து கூறு தல் அரிதினும் அரியதாம். ஞானியானாலும் பேதைய னானாலும் தர்மவானானாலும் அல்லாதவனானாலும் குரு பியானாலும் பரோபகாரியானாலும், இவர்களுடைய உள்ளத்தில் நிகழ்பவைகளையும், அவர்களைத் தூண் டும் சக்தியையும் ஒருவாறு அநுமானிக்க முடியுமே யல்லாது பூரணமாகத் தெரிந்துகொள்ளற் கியலாது. இவர்களெல்லோரும் சக்தியின் பலதிற உருவங்களா வார்; சக்திலீலையின் நானாவித வேஷதாரிகள் போ லும் இவர். அவர்களி லொவ்வொருவருள்ளும் நிகழ் பவைகளையெல்லாம் இயன்றவரையிலுங்கூட விரித் துரைக்கப் புகுவோமாயின், அது எண்ணிறந்த நூல் களாகப் பெருகும்.

அந்தக்கரண மென்பது காமக் குரோதங்களின் குகையாம்; கனவுகளின் உலையாம்; வெறுப்பையும், அவமானத்தையும் அச்சத்தையும் எழுப்பக்கூடிய சிந்தனைகளின் வாசஸ்தானமாம்; சற்பங்களும் வித ண்டவாதங்களும் ஏத்துவாபாசங்களும் விளையாடு மிடங்களாம்; ஆசாபாசங்களின் சமர்க்களமாம். மாந் தர்தம் அந்தக்கரணத்துள் ஊடுருவிப் பார்ப்போமா யின், **தாந்தே** என்னும் லதீன் கவி இயற்றிய "ஈச்வர லீலை" (Dante's "Divine Comedy") என்ற காவி யத்திலும், நம்முடைய கருட புராணத்திலும் அறிவி க்கப்பட்டிருக்கும் நரகக் குழிகளும் பூதகணங்களும் புலனாகும்.

"வேங்கை, நரி, ஓநாய், உடும்பு, சர்ப்பங்களைத் தே டித்திரிந்து எதிர்த்துக் கொன்று தான் வீரன் எனத் தோள் தட்டுவதைக்காட்டிலும், அம்மிருகங்களின் வி சேஷ குணாதிசயங்கள் எல்லாம் பூரிக்கப்பெற்றுள்ள நம்முடைய அகத்தை ஆராய்ந்து அந் நீச குணங்களை அழித்தலன்றோ ஞானசக்தியின் இயல்பென அமைந் திருக்கின்றது. "புருஷ"னின் வெற்றியாவது மானுட வாழ்க்கையின் மெய் ஆதர்சமாவது. மேற்சொல்லிய விலங்குகளைப் புறக்கருவிகளால் கொன்று வெல்லலா ம்; ஆனால், அகப் போராட்டங்களை அவ்வகத்தைக் கொண்டுதான் திருத்தித் தூயதாக்கி உயர்த்தவேண் டும்! 'இழிய' சிந்தனைகளும் 'பாப'ச் செயல்களும் எவ் வூற்றினின்று இழிந்து ஓடுகின்றனவோ, அவ் வூற்றினின்றேதான் அக் களங்கங்களையும் குற்றங் குறைகளையும் போக்குவதற்குரிய சக்தியும் ஊறித் ததும்புகின்றதுபோலும்!"

"ஆகாயத்தில், விண்மீன்கள் கோடிக் கணக்காகச் செறிந்து கிடக்கின்றன வென்றும், அவைகளிற் சில நக்ஷத்திரங்கள்தான், (அவைகளும் தூரதிருஷ்டிக் கண்ணாடி வாயிலாகத்தான்) புலப்படுகின்றன என் றும் வான சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர். அவைகளிற் சில நிலைத்திருப்பன என்றும் வேறு சில ஆகாய வீதியில் அளப்பரிய வேகத்துடன் பறந்து கொண்டிருப்பன என்றும், இன்னுஞ் சில தன்னை யும் பிறவற்றையும் சுற்றிக்கொண்டிருப்பன வென் றும் தெரிவிக்கின்றனர். இதுபோல், சிதாகாசத்தில், நூற்றுக்கணக்கான கலைஞர்கள் இருந்துவருகின்ற னர். இவர்களிற் சிலர், சூரியனைப்போல், சலிக்காத ஒளியுடனும் மாறாக் குணத்துடனும் பிரகாசித்து மாந்தர்க்கு உதவிபுரிந்துவருகின்றனர்; வேறு சிலர் அவ்வப்போது நம்முன் தோன்றி நம்மைப் பிரமிக் கச்செய்து மறைகின்றனர்: தூமகேதுபோல், சிலர் முன் வந்து ஆரவாரங்கள் செய்து ஒழிகின்றனர்; மற்றுஞ் சிலர் தம்மையே சுற்றி, உள்ளாராய்ச்சியிற் புகுந்து உள்ளமைப்பையும், மனப் போராட்டங் களையும், அக ஆர்ப்பாடங்களையும் உற்றறிந்து, சுய சக்தியை வெளியிடுகின்றனர்.

"மனிதர்தம் குண நடத்தைகள் பலவாகத் தோன் றினும், உண்மையில், ஒரே முடிவைத்தான் நோக்கி இயங்குகின்றன என்றும்; அகம் புறம் ஆராய்ச்சிக ளிற் புகுந்து உண்மையை உணர்ந்து, அல்லலில்லா வாழ்க்கையின் அமைதியைப் பெற்று அநுபவிக்க முயற்சி செய்கையில், நிலைதவறிப் பற்பல அவதிகளு க்கு இலக்காகித் துடித்தபின்னேதான் நிரதிசய இன் ப நிலையில் மனிதர் அமரக்கூடுமென்றும் உள்ளத்தின் இயல்பறிந்த சாஸ்திரிகள் காட்டியிருக்கின்றனர். இவ் வாறு அல்லற் படுபவர்களிற் சிலர், தம்முள் எழுந்த ப ற்பல எண்ணங்களையும், உலகாதிகளைப் பற்றிய அபி ப்பிராயங்களையும், தாம்கொண்டு விடுத்த செயல்களை யும், இவைகளின் தாரதம்மியங்களையும், நிர்ணயித் துப் பின்பற்றிய சித்தாந்தங்களையும், இடைவிடா மல் உக்கிரத்துடன் மேற்கிளம்பி வருத்தும் வேட்கை அவா பற்றுக்களையும், இவைகளின் பலாபலன்களை யும், தம் சுயாநுபவங்களின் திறனையும் மக்கள் அனை வரும் அவரவர் மனப்பாங்கின்படி கிரஹித்துக்கொ ண்டு தக்கன செய்து உய்யும்பொருட்டு வெளியிட்டு வருகின்றனர். விசாரிப்பின் முடிபுகளையும், அநுப வங்களின் பலன்களையும் முனிவர்கள் தம் வாழ்க்கை மூலமாக உணர்த்துகின்றனர்; பிரபஞ்ச மர்மங்களை யும் வாழ்க்கைக் கருத்தையும் ஞானிகள் தர்க்க முறையால் நிரூபிக்க முயல்கின்றனர்; சில கலைஞர் கள் சுயஜீவ சரித மூலமாகவோ (Autobiograhpy) அல்லது நாளாகமங்கள் (Diaries) வாயிலாகவோ, தம்முள் எழுந்த சிந்தனைகளையும், தாம் படித்த நூல் களின் சாராம்சத்தையும், அவைகளைப்பற்றிய தம் முடைய கருத்துக்களையும், உண்மை அறியவேண்டு மென்ற ஆர்வமுடையவர்களுக்குப் பொதுவாக உண் டாகும் அகப் புற நிகழ்ச்சிகளையும் மாற்றங்களையும், காலத்தினரின் போக்குகளையும் யாவரும் அறிந்து, தக்கனசெய்து சிறக்கும்படி பிரசுரம் செய்கின்றனர்; மாந்தர்க்குச் சுவபாவமான மடி மிடி நோய் அவலக் கவலை கையாறழுங்கல், முதலாயினவைகளை எதிர் த்து எவ்வாறு வெல்லலாம், அல்லது அவைகளின் கொடூரத்தைக் குறைத்து மேலேறலா மென்பதை யும், உயரவேண்டு மென்பதையும், உய்யக்கூடுமென் பதையும், இத்தகையவர் அறிவுறுத்துவதால், அவர் களுடைய ஜீவசரிதங்களையும், இயற்றிய நூல்களை யும், குறிப்பிட்ட எண்ணங்களையும் படித்தல் பய னற்றதன்று என்பது சொல்லாமலே விளங்கும்.

இக்கருத்துடன், சிந்தனையாள ரொருவரின் ஜீவ சரித்திரத்தைச் சுருக்கமாகக் காட்டிப் பின் அவரு டைய எண்ணக்குறிப்புக்களிற் சிலவற்றை (Journal) எம்மால் இயன்றவரையிலும் தமிழ்ப்படுத்துவோம்.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[531-வது பக்கத் தொடர்ச்சி]

பா

1607 பாகன் புதனும் பாகனு மாகும்.
1608 பாகு பாலும் பகுப்பும் பாக்கும்
பாகனும் வெல்லமும் குழம்பும் பரணியும்.
1609 பாக்கு எதிர்காலத் திடைச்சொல்லும் பாக்கும்.
1610 பாகலே கார வல்லியும் பலாவும்
மூப்பா கலுமென மொழிந்தனர் புலவர்.
1611 பாகரம் புரிசையு ளுயர்த்திய நிலமும்
பரிக முமெனப் பகர்ந்தனர் புலவர்.
1612 பாக்கம் நெய்த லூரு மூரும்
மருத வூரு மெனவழங் கினரே.
1613 பாகம் பாதியு மளவும் பதமும்
பட்டும் சர்க்கரையும் பலகூறு மாகும்.
1614 பாங்கர் பக்கமு மிடமும் பக்கமும்.
1615 பாங்கு பாலும் பக்கமும் பரிசும்
கன்மமுந் தோழியுங் கழற லாகும்.
1616 பாங்கன் பரிசும் பக்கமுந் தோழனும்.
1617 பாசு வேயும் பசுமையு மாகும்.
1618 பாச மூசித் துளையுங் கயிறும்
பேயு மன்பு நூலு மாகும்.
1619 பாசி மழையும் பாசியு மாகும்.
1620 பாசனம் உண்கலனும் பாண்டமுஞ் சுற்றமும்.
1621 பாடகஞ் சிவப்பும் பாடகமு மீளலும்.
1622 பாடு பெருமையு மொலியும் படுதலும்
பக்கமும் பண்பு மிடமும் பட்டும்.
1623 பாடி நகரும் நாடும் படையும்
பாசறையு மாய ரூரும் பகர்வர்.
1624 பாடை யோரிசையு மாசந்தியு மாகும்.
1625 பாடலஞ் சேரன் பரியுஞ் சிவப்பும்
பாதிரியுஞ் சபதமு மூங்கிலு மாகும்.
1626 பாட்டி பாணிச்சியும் பாட்டியு நாயும்
பன்றியு நரியும் பாட்டிமையு மாகும்.
1627 பாணி பாட்டி லொலியுஞ் சோலையும்
பண்டமும் பாடலு மூரும் நீரும்
அழகுங் கையும் படையும் பற்றும்
நாடு நெடும்பொழுதுங் கானு மாகும்.
1628 பாண்டில் பரியங்கமும் வேயு மூர்தியும்
ஏறு மிடப ராசியும் வட்டமும்
கட்டிலும் தாளமும் விளக்கின் றகழியும்
வண்டிலு மெனவே வழங்கினர் புலவர்.
1629 பாண மேக வண்ணக் குறிஞ்சியும்
பட்டுங் கணையும் பகர்ந்தனர் புலவர்.
1630 பாதி சனியும் பாதியு மாகும்.
1631 பாதிரி மூங்கிலும் பாடலமு மாகும்.
1632 பாத்துப் பகுத்துண்டலுங் கஞ்சியுஞ் சோறும்.
1633 பாத்தி சிறுச்செய்யும் வீடும் பகுத்தலும்
பாண்டமும் பத்தியூர் பகர்ந்தனர் புலவர்.
1634 பாதவங் கிரியுந் தருவு மாகும்.
1635 பாம்பு வரம்பும் பாம்பின் விகற்பமும்.
1636 பாயசம் பாற்சோறும் பாற்குறண் டியுமாம்.
1637 பாயல் வீழ்தலு மெத்தையு மாகும்.
1638 பாய்மாப் புலியுங் குதிரையும் பகர்வர்.
1639 பாரி தூசும் பூமியுங் கட்டிலும்
கடலு மனைவியும் வள்ளலுங் கள்ளும்
பார முப்பா சறையும் பகர்வர்.
1640 பார் மறையோரும் பூமியும் புத்தனும்
கல்லின் பரப்புந் தேரின் பரப்பும்
உரோகணி யுமென வுரைத்தனர் புலவர்.
1641 பாரம் பொறையும் புவியும் வன்பாரமும்
கலனையுங் கவசமு நீர்க்கரையு நிறைவும்
மரக்கல மும்வினை யாட்டும் வகுத்தனர்.
1642 பார்வை கண்ணு மதிப்புந் தீவகமும்.
1643 பாராவாரங் கடலுங் கடற்கட் கரையும்.
1644 பாராட் டுக்கொண் டாடலு முலாவலும்.
1645 பாரதி தோணியும் பனுவ லாட்டியும்.
1646 பாரித்தல் தோற்றலும் பரப்புதலு மாகும்.
1647 பாலம் நீர்ப்பாலமு நெற்றியும் பரசும்.
1648 பாலே பக்கமும் பகுத்தலு மிடமும்
பாலுந் திசையும் வெண்மையு மியல்பும்.
1649 பாலி கள்ளும் பாலி யாறும்.
1650 பாலை வெம்மையும் புணர்ந்து போதலும்
பொருள்வயிற் பிரிதலும் பாடலும் பாலையும்
பாலைநிலப் பாட்டு[ம்] பிரிவு ணர்த்தலும்
புணர் பூசமுந் தருவுஞ் சுவையும்.
1651 பாலிகை யுதடும் பட்டவான் முட்டும்
வட்டமு மெனவே வழங்க லாகும்.
1652 பாவகன் தீயும் தீக்கட வுளுமாம்.
1653 பாவம் பாவனையும் மெய்யும் பாவமும்.
1654 பாவை பெண்ணும் பாவையு மாகும்.
1655 பாழி விண்ணுந் தவத்தோர் சாலையும்
ஊரும் படுக்கையு மொன்னல ரூரும்
பாயலும் விலங்கின் சேக்கையும் வலியும்
பாழு மலையின் முழையும் பகர்வர்.
1656 பாளிதம் பட்டும் கண்ட சருக்கரையும்
பாற்சோறுங் குழம்பும் பகர லாகும்.
1657 பானு வாதித்தனு மொளியும் பகலுமாம்.
1658 பானல் செய்யுங் கடலு நெய்தலும்
மருதமுங் கள்ளும் பரியும் வெற்றிலையும்.
1659 பாவே நூற்பா விகற்பமும் பனுவலும்
நூலும் பரத்தலும் பரவலும் பாம்பும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0
குழந்தைகளுக்கு
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0

"சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு
ஸோல் ஏஜண்ட்: கன்ஸான், மதுரை

தைலங்கள்:
சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக „ 0-12-0
பிருங்காமலக „ 0-12-0
ஸ்திரீகளுக்கு
ஸுமதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
"நஞ்சன்கூடு பல்பொடி"
(ரிஜிஸ்தர் செய்துள்ளது)
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

கிளியால் அகப்பட்ட திருடன்:—பம்பாய் நகரத்தில் கிர்காம் வீதியிலுள்ள ஒரு வீட்டில், பேர்பெற்ற திருடனுகிய டி. சௌஸா வெகு சாமர்த்தியமாகப் புகுந்துவிட்டான். அவ்வீட்டிலுள்ள ஒரு ஆப்பிரிக்காக் கிளி திருடனைக் கண்டதும் இரைச்சலிட்டுக் கத்திக் கத்திச் சொந்தக்காரரை எழுப்பியது. திருடன் கிளியின் சப்தத்தைக் கேட்டு நடுங்கித் தப்பியோடவும் மார்க்கமின்றி வீட்டிலுள்ள ஸ்நான அறையில் ஒளிந்துகொண்டான். அந்தக் கிளியின் சப்தத்தைக் கேட்ட வீட்டுச் சொந்தக்காரர் விழித்துச் சந்தேகப்பட்டு நாலா புறமும் சுற்றிப் பார்த்தனர். ஆனால் திருடனைக் காணாததால் மீண்டும் படுக்கச் சென்றனர். இவர்கள் படுத்ததும் கிளி மீண்டும் கூச்சலிட ஆரம்பித்தது. வீட்டிலுள்ள சிலர் சந்தேகப்பட்டு வீட்டை முழுவதும் சோதிக்கலாயினர். இவர்கள் சோதித்துக்கொண்டுவந்தபோது ஸ்நான அறையிலுள்ள ஓர் கண்ணாடியில் திருடன் சாய லடிப்பதைக் கண்டு திருடனைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

* * *

பொறுமையற்ற புருஷன்:—ஆஸ்ட்ரியா நாட்டில் ப்ரேக் நகரில் ஆண்டன் நெவாலி யென்பவர் தமது மனைவி தம்மிடம் சொல்லாமல் வெளியே போயிருந்தது பற்றித் தீராத பெருங் கோபம் கொண்டுவிட்டார். (அவள் சோரம் போயிருப்பதாகக் கருதினர்.) அதனால் பொறுமை கொண்ட அவர் தமது மனைவியின் இரு தங்கைமார்களேயும் கொன்றுவிட்டுத் தாமும் தற்கொலை செய்துகொண்டார். பின்னர் மனைவி வந்தாள். அவள் கோயிலுக்குப் போயிருந்தாள்!

ஆறு மைல் பீரங்கி:—இது காறும் உலகத்தில் செய்யப்பட்டிராத பிரமாண்டமான பீரங்கி யொன்று அமெரிக்கர்கள் செய்திருக்கிறார்கள். அதன் வாயகலம் 14 அங்குலம். நிறை 40 டன். அதைச் செய்வதற்குச் செலவு 22,000 பவுன். ஒரு வெடிக்குச் செலவு 150 பவுன்: $5\frac{1}{2}$ அடி நீளமும் 1660 பவுன் நிறையுமுள்ள இருப்பாயுதத்தை 6 மைல் தூரம் இந்தப் பீரங்கி எறியுமாம்.

விதியின் கதி:—பாரிஸில் பல வருடங்களாக ஒருவன் தன் மனைவியுடன் அதிக கஷ்டப்பட்டு உழைத்துப் பணம் சம்பாதித்த பிறகு, இருவரும் ஸ்விட்ஸர்லாந்துக்குச் சென்று சௌக்கியமாக வாழலாமென்று புறப்பட்ட தினத்தன்று அவர்கள் இருவரும் தாங்கள் சேர்த்து வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு உல்லாசமாகச் சிறு படகில் சென்றனராம். துர் அதிஷ்டவசமாகப் படகு கவிழ்ந்தது: பணமும் போயிற்று. ஆனால் அவர்கள் மாத்திரம் காப்பாற்றப்பட்டனர். அவர்கள் மனமுடைந்து வீட்டிற்கு திரும்பினர்.

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக
சக்தியையும், தாது புஷ்டியையும்
கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ. 1 0 0
5 டப்பிகள்	ரூ. 4 0 0

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ...	... Rs. 1,55,66,720
Out of a business of	... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over	... Rs. 1,00,00,000
Total Assets exceed	... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

ஏஷ்யாடிக் கவர்ன்மெண்டு செக்யூரட்டி
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்,
(மைசூரில் இணைக்கப்பட்டது.)

பிரதான இந்திய சமஸ்தானத்தைச் சேர்ந்த இம் முற்போக்கு வாய்ந்த லைப் ஆபீஸ் இணையற்ற மிகவும் குறைந்த செலவில் நவீன அஷ்யூரன்ஸ் திட்டங்கள் யாவற்றையும் அளிக்கின்றது. நோய், விபத்து காலங்களில் சக்தியில்லாமலிருந்தால் அப்போது லாபங்களுடனும், தானகவே பறிமுதல் செய்யப்பட முடியாத வசதியுடனும் கூடியது. பாலிஸிகள் பறிமுதல் செய்யப்படாமலும், ஆக்ஷேபிக்க முடியாமலும் உள்ளவை. பாலிஸி கெடுவடையும் காலத்தில் சாசுவதமான ஆதரவு கொடுப்பது. ஸ்திரீகளது ஆயுள்களுக்கும் இன்ஷியூர் செய்யப்படும்.

இன்றே விபரங்களுக்கு எழுதுக:—

V. ரங்கஸாமி பி. ஏ., பி. எல்.,
ஜெனரல் செக்ரிடரி & மானேஜர்,
பெங்களூர் ஸிடி.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)